ஓம் விநாயகநம

# சந்திரதீபம்

## சைவம் வளர்க்கும் தமிழ் பத்திரிகை

University of Jaffna Sri Lanka
RECEIVED
1980-10-07
Periodicals Division

**தருமத்தைக் காத்து தவத்தைப் பெருக்கி சிவத்தைப் பேணத் திருவருள் கொண்டது.**

இதழ் 3

திருக்கார்த்திகை விசேட மலர்

சித்தார்த்தி வருஷம் ஐப்பசி மாதம் 16ம் திகதி
வெள்ளிக்கிழமை [2-11-1979]

சுடர் 3

### கந்தபுராணம்

குமர கோட்டத்தமர்ந்த குரு மூர்த்தி ஆறுமுகப் பெருமான் திருவருள் கந்தபுராணம் என்னும் நூலாக கச்சியப்பர் எனும் பேருடன் காஞ்சியில் வாழ்ந்த அந்தணச் சிவாச்சாரியாரின் திருவாக்காக இந்த உலகில் உள்ள மக்கட்கு கிடைத்தது உண்மையில் கந்தபுராணம் முதல் அடி எடுக்கப்பட்ட நாள் உலகில் மனிதர் தேவர்கட்கு திருவருள் பெருக்கும் நாள் எனலாம்.


கந்தபுராணம் என்பது துட்டத்தனத்தை ஒழித்திட ஓதப் படும் நூலாகும். எத்தனையோ மந்திரங்கள் சுபிட்சம் பெற ஓதப்படல் போன்று கந்தபுராணம் உலகில் துட்டத்தனத்தை அடக்கி எங்கும் தருமத்தையும் நீதியையும் நிலை பெறச் செய்வதாகும்?

கந்தபுராணத்தை அதன் சரித்திரத்தை உணர்வதாலுல் முதற் கண் சிவனை நிந்தனை செய்வார்க்கும் சிவனை நிந்திப்பாருடன் கூட வாழ்வார்க்கும் அவரின் சொற் கேட்டு ஏவல் செய்வார்க்கும் அசுரரின் கீழ் அடங்கி ஒடுங்கி வாழ்கின்ற நீக்க முடியாத அடிமைத்தளை நேரும் என்பதாகும்:

இந்த நிலையில் சிவனை வழிபட்டு வரம் பெற்ருரும் தலைமையான பதவியில் உலகில் வாழும்போது தன்பேறு சிவன் தந்தபேறு என மதியாது தன்னை உய்ய வைத்த கடவுளை மறக்கவே செய்யும் அதல்லாது இகழச் செய்யும் அதிகாரத்தில் எழும் அகந்தையைக் கட்டுப்படுத்த முடியாது என்பது தெரியப்படுத்தப்படுகிறது. இதன் பின் விளைவு மோசமான நிலையின் அடிமைத்தளையில் சிக்கவைக்கும்:

ஆதலின் இந்த நியதியின் படி சிவனை நிந்தித்த தக்

## திருச்செந்தூர் அருள்மிகு ஆறுமுகன்



**எங்கெங்கும் திருமுகம் எங்கெங்கும் திருவிழி எங்கெங்கும் திருச்செவி எங்கெங்கும் திருக்கரம் எங்கெங்கும் திருவடி எங்கெங்கும் திருவுருவமாகி எங்கணும் செறிந்து அருள் செயும் ஆறுமுகத்து எம் இறைவன்**

கன் யாகத்து அவி(உணவு) உண்ண வந்திருந்த தேவர் அனைவர்க்கும்தண்டனைவந்தது

இதன் வரவு மாயை மூலம் வந்தது: மாயை சித்தையை வசப்படுத்தும் பெண்ணுகியது: அதனிடம் தோன்றியது முழுவதும் அசுரராகின்றனர். அத்துடன் நெறியிலாத பெண்க்ள்.

இதனை நாம் உணர்வமேல் உலகில் நாம் காணுமிடமெல்லாம் மாயை தெருவில் மாயை: சினிமாவில் மாயை: கூட்டத்தில் மாயை வண்டிகளில் போக்கில் வரவில் எல்லாம் மாயையே இவர்கள் பால் காசிபமுனிவர் போல் சிக்கியவரும் மாயை என உணரமாட்டாது மாயைக் காணவிட்டால் புலம்புவாருமாகவே காணப்படுகின்றனர்.

அன்று அசுரர் மாயையிடம் இரவோடு இரவாக பிறந்தனர். ஆனுல் இன்று மாயைகளிடம் இருநூற்றி அறுபத்தைந்து நாள் கழித்து பிறந்து மனித உருவத்தில் தெருவெல்லாம் காணப்படுகின்றனர்.

அன்று அசுரர் வரத்தின் சிறப்பால் தேவரை அடிமையாக்கி ஆண்டனர். மனிதரில் அசுரர் வரமின்றி நல்லவரான மனிதரில் தேவரை அடிமைப் படுத்துகிருர். அதே அசுரர் போல் கொலை களவு வஞ்சனை பொய் சண்டித்தனம் அடக்குமுறை ஆதிக்க வெறி அத்தனையும் செய்கிருர்.

எனவே நன்மையை விரும்பும் ஏழைகளான மனித தேவர்கட்கு எம்பிரான் ஆறுமுகனே 'அருள வல்லவன் அன்று கார்த்திகைப் பெண்களிடம் ஆறு குழந்தையாக அமர்ந்து முலை உண்டு விளையாடி அவர்கட்கு அருள் புரிந்து ஆறு உருவமும் ஓர் உருவமாகி உலகுய்ய நிற்கும் பெருமானைப் போற்றுவோம்

இப்படியரக வீரவாகுதேவர் அசுரர் தலைவன் [illegible] வைத்தது நீதி அல்ல அதை நீக்கி விட்டு நன்றுடன்
கின்ருர். [illegible] வாழ்வாயாக என நேரில் சென்று சொல்லும்படி வீரவாகுதேவரை
அசுரர் தலைவன் சூரன் மேற்கொண்ட கருணையால் எமது ஆறு சூரபன்மன் இருந்த மகேந்திர நகர்க்கு தூதாக அனுப்புகின்ருர்.
முகப்பெருமான் திருச்செந்தூரில் தாம் இருந்தருளும் பொழுது தேவ வீரவாகு தேவர் எம்பிரான் பணி தலைமேற் கொண்டு ஒரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

அணுவும் உட்புக முடியாது பெரும் காவலுடன் இருந்த சூரனது வீரம கேந்திர நகரைச் சேர்கின்றார். எம்பிரான் அருளால் சென்ற வீரவாகு தேவர் சூரன் முன் எய்தி அவன் எவ்வளவு சிறப்புடன் சிம்மாசனத்து இருந்தனனோ அவ்வளவு சிறப்புடன் அருளால் அங்கு வந்த சிம்மாசனம் ஒன்றின் மீது ஏறி முருகன் நல் நாமமே போற்றி இருந்தனர்.

அவர் வருகை கண்டு அதிர்ச்சி அடைந்த சூரன் அவர் மீது பெருங் கோபங் கொண்டு அவர் அவ்விடம் வந்த காரணம் கேட்கிறான். வீரவாகு தேவர் தான் வந்த காரணத்தை எடுத்து மொழிந்து தேவர் சிறையை நீக்கிடும் படி கேட்கின்றார்.

அதனை உணரப்படமாட்டாத சூரன் மிகு ஆத்திரமடைந்து சிவனது நெற்றிக்கண் நின்றும் வந்த மழலைச் சொல்மாறாத குழந்தையின் சொல்லை அண்டங்கள் யாவையும் தன் ஆணைக் கீழ் அடக்கி ஆளும் தான் கேட்கத் தயர்ராக இல்லை என இகழ்கின்றான்.

வீரவாகு தேவர்க்கு வேதனையாகின்றது, தன் சொல்லை நீதியை அவமதித்து எம்பெருமானை இகழ்கின்றான் பாதகன் இவன் அழிதற்கு ஏற்ற வகையானதுஇது எனஎண்ணி சூரனிடம் அவன் உணர்ந்து உய்யும் பொருட்டு எம்பெருமான் ஆறுமுகன் பெருமையை எடுத்துக் கூறிடும் கந்த புராணத்து தரப்பட்டுள்ளன இவையாகும்:

மானு டக்தரைத் தேவென்பர் வானகத் தவரை
ஏனை முத்தொழி லவரென்பர் இருவர்தங் களையும்
நானி லத்தினிற் பரம்பொருள் இவரென நவில்வார்
ஆன சொற்றிறம் முகமனே சரதமற் றன்றால்.

இவ்வுலகில் மனிதரையும் கடவுளர் என்பார்கள். தேவர்களை மற்றைய முத்தொழில் புரியும் பிரமா விஷ்ணு உருத்திரன் எனவும் போற்றுவார்கள். இன்னும் சிலர் பிரமா விஷ்ணுக்களையும் இப்பூமியில் இவரே பரம்பொருள் எனப் போற்றுதல் புரிவார்: இவ்வாறு இவர்களைச் சொல்வது முகமனான துதியாகும் உண்மையல்ல என்பதை அறிவாயாக

மனிதரைத் தேவர் என்றும் தேவரை மும் மூர்த்திகள் என்றும் பிரம விஷ்ணுக்களை பரம்பொருள் என்றும் புகழ்வது அவரவர்களைச் சிறப்பிக்கும் பொருட்டாகவேயன்றி உண்மையல்ல. இது உலகில் அவர்களைப் போற்றுங்கால் செய்யும் முகமனான துதிகளாகும். ஆனால் அவர்கள் உண்மையில் முகமனால் கூறப்படும் துதிகளுக்கு ஏற்றவர் அல்ல,

ஆய புல்லிய புகழ்ச்சிபோற் கொள்ளலை அறிவோர்
தேய மாவது யார்க்குமெட் டாதது தெளியில்
தூய வீடுபே றருளுவது உபநிடத் துணிவாம்
வாய்மை யாவது புகலுவன் கேளென வகுப்பான்.

அவ்வாறாக மனிதரைத் தேவரை, பிரம, விஷ்ணுக்களைச் சொல்லும் இழ்மையான புகழ்போல எமது பகவானை எண்ணாதே. அது அறிவாளிகளால் தியானம் செய்யப்படும் பொருளாவது; எவர்க்குமே எட்டமுடியாதபடி நின்றது அதனைத் தெளிந்து அடைந்து கொண்டோர்க்கு மிகத் தூயதான முத்தி இன்பத்தைத் தருவது: உபநிடதங்களின் துணிந்த உண்மைப் பொருளாவது. அதன் பெருமையை முழுவதும் நான் உனக்கு எடுத்துச் சொல்வேன் கேள் என்று எம்பிரான் சிறப்புப் பற்றி வீரவாகுதேவர் சொல்லியருள்கின்றார்:

மண்ணை ளந்திடு மாயனும் வனசமே லவனும்
எண்ண ரும்பகல் தேடியுங் காண்கிலா திருந்த
பண்ண வன்நுதல் விழியிடைப் பரஞ்சுடர் உருவாய்
உண்ணி றைந்தபே ரருளினன் மதலையாய் உதித்தான்.

ஈரடியால் மூவுலகும் அளவு செய்த திருமாலும், செந்தாமரையில் இருப்பிடங் கொண்ட பிரமதேவரும் அடியும் முடியும் அறியும் ஆவலால் எண்ணற்ற நாட்கள் தேடியும் காண்கிலாது இருந்த கடவுளான சிவபெருமானின் நெற்றியந் தலத்துத் திருவிழியிடையாகப் பரஞ்சுடர் வடிவாய் திருவுள்ளத்து நிறைந்த கருணைப் பேரருளுடன் குழந்தையாய் உதித்தருளினார்.

முன்ன வர்க்குமுன் னாகுவோர் தமக்குமுற் பட்டுத்
தன்னை நேரிலா ஈசனுந் தனிப்பெயர் தாங்கி
இன்னு யிர்க்குயி ராய்அரு வுருமாய் எவர்க்கும்
அன்னை தாதையாய் இருந்திடும் பரமனே அவன்காண்.

இவ்வுலகில் முன்னர் என்பார்கட்கெல்லாம் முற்பட்டவர் என்னும் கடவுளர்க்கும் முதியவராக முற்பட்டுத் தமக்கு நேர்பிறிதொருவர் இல்லாத ஈசன் என்னும் தனிப் பெயரைத் தாங்கி இன்புடைய உயிர்கட்கெல்லாம் உயிராகி அருவாகி உருவமாகி எவர்க்கும் தாயாகித் தந்தையாகி இருந்திடும் பரமனே நீ பாலன் என்று பகர்த்த அவனாகும் என்பதை எண்ணிக்கொள்.

அவரின் தோற்றமோ, படைப்பவர் காப்பவர்கட்கு எட்டொணாத பரம்பொருளின் திருநுதல் விழி. கருணையே வடிவம். பேரருளே திரு உள்ள நிறைவு; யாவர்க்கும் முற்பட்ட பொருளான ஈசனே அவன்; அன்றியும் உடலுக்குள் உயிர்போன்று உயிர்க்குயிராய் நிற்பவன். எல்லார்க்கும் தந்தை தாய் அவன். இதை அறி.

ஈசனேயவன் ஆடலால் மதலையா யினன்காண்
ஆசி லாவவன் அறுமுகத் துண்மையால் அறி நீ
பேசில் ஆங்கவன் பரனொடு பேதகன் அல்லன்
தேசு லாவகன் மணியிடைக் கதிர்வரு திறம்போல்.

ஈசனே அவன் திருவிளையாடலால் குழந்தை உருக்கொண்டருளினான். இந்த உண்மையை அப்பனுடைய அற்புதமான ஆறுமுகங்களின் சிறப்பால் தெரிந்துகொள். அவன் குழந்தையான இளநலத்தை நாம் சொல்லப்போனால் அவன் சிவபிரானுடன் இரண்டாகப் பேதிக்கப்படுபவன் அல்ல. அவன் தோற்றவரலாறு ஒளி உடைய இரத்தினத்தில் அந்த ஒளி முன் கூடியே உள்ளிருந்து தோன்றுவது போல என உணர்வாய். அவன் சிவன் திருநுதல் விளியிடைத் தோன்றினும் காலமும் கருமமும் ... மூலமான முழுமுதற் பொருளாவன் என்பதைக் கூறினை அறிவாயாக.

பூதம் ஐந்தினுட் கீழ்நிலைத் தாகிய புவியுள்
ஓது கின்றபல் அண்டத்தின் ஓராயிரத் தெட்டுங்
கோதில் ஆக்கமும் படைகளும் உனக்குமுன் கொடுத்த
ஆதி ஈசனே அவனெனின் மாற்றுவ தரிதோ,

ஆகாயம் காற்று நெருப்பு நீர் மண் என்னும் ஐந்து பூதங்களுள் கீழ் நிலையான பூமியின் தொடர்பாய் உள்ளதாகச் சொல்லப்பெறுகின்ற நூற்றொரு கோடியின் மேற்பட்ட அண்டங்களில் ஓர் ஆயிரத்தெட்டு அண்டங்களையும்; குறைவிலாத செல்வங்களையும் படைகளையும் உனக்கு முன்னர் வரமாகக் கொடுத்த ஆதியாகிய ஈசனே இந்தப் பாலன் என்றால் அவனால் உனது செல்வத்தை அரச பதநிலையை நீக்கிவிடுதல் அருமையாகுமோ?

வரங்கொடுத்த ஆதி ஈசனே முருகனாக விளங்குகின்றான் என்றால் அவனால் உனது மேன்மையை நீக்கல் முடியாதோ? வானத்தில் நின்றும் காற்று. காற்றில் நின்றும் நெருப்பு. நெருப்பில் நின்றும் நீர். நீரில் நின்றும் பூமியானது தோன்றுவது முறையாகும் என்பதனால் கீழநிலைத் தாகிய பூமி என்றார்.

ஏத மில்புவி அண்டங்கள் பெற்றனம் என்றே
பேதை யுன்னினை சிறிதவன் தன்னருள் பெறுவோர்
பூதம் ஐந்தினும் ஏனைய திறத்தினும் புறத்து
மீது மாமண்டம் எவற்றிக்கும் வேத்தியல் புரிவார்.

குறைவிலாத பூமி முதல் அண்டங்களைப் பெற்றோம் என்று அடபேதையே நீ நினைத்தாய்; ஆனால் சிறிது அந்த அப்பனின் அருள்பெற்றுக் கொள்வோர் அண்டங்கள் மட்டுமல்ல ஐந்து பூதங்களுக்கும் மற்றைய எத்திறத்தினிலும் உள்ளும் புறம்புமாக மேலுள்ள அண்டம் எவற்றிக்குமே அரசாட்சி புரிவோர் என்பதை நீ அறிவாய்.

ஐந்து பூதங்களை ஒன்றை மாறி ஒன்றாக்கி கல்லையும் மண்ணையும் ஆளுவார்கள் அன்றியும் வானில் உள்ள புறமாகிய இடங்கட்கும் ஆட்சி புரியும் வலிமை நீ பாலன் என்ற ஐயனின் அருள் பெற்றார்க்கு உண்டு;

ஆதி யாகிய குடிலையும் ஐவகைப் பொறியும்
வேதம் யாவையுந் தந்திரப் பன்மையும் வேறு
ஓத நின்றிடு கலைகளும் அவ்வவற் றுணர்வாம்
போதம் யாவையுங் குமரவேள் பொருவிலா உருவம்.

ஆதியான பிரணவமும் ஐந்து வகையான பொறிகளும் வேதங்கள் யாவும் ஆகமங்களின் பல தொகுதிகளும் இன்னும் வேறாகச் சொல்ல நிற்கின்ற கலைகளும் அவை அவைகளின் உண்மை உணர்வாகிய ஞான சொரூபம் யாவும் குமரப் பெருமானின் நிகரில்லாத உருவம்என அறி.

எங்க ணும்பணி வதனங்கள் எங்கணும் விழிகள்
எங்க ணுந்திருக் கேள்விகள் எங்கணுங் கரங்கள்
எங்க ணுந்திருக் கழலடி எங்கணும் வடிவம்
எங்க ணுஞ்செறிந் தருள்செயும் அறுமுகத் திறைக்கே.

அவர்க்கு எங்கணும் எல்லாரும் தொழுதேத்தும் திருமுகங்கள் எங்கணும் அவர்க்கு திருவிழிகள் எங்கணும் திருச்செவிகள் எங்கணும் திருக்கைகள் எங்கணும் திருநிறையும் சிலம்பணிந்த சேவடிகள் எங்கணும் அவர் வடிவமாகி நிறைந்து எங்கணும் செறிந்து அருள் செய்யும் ஆறுமுகம் டையஇறையோனுக்கு என்பதை அறிவாயாக

அங்கிங்கெனாதபடிஎங்குபிரகாசமாய் நிறைந்து செறிந்து அருள் செய்வான்ஆறுமுகமுடையஐயன்என்றார்:

தாம ரைக்கணன் முதலிய பண்ணவர் தமக்கும்
ஏமு றப்படு மறைக்கெலாம் ஆதிபெற் றியலும்
ஓமெ னப்படுங் குடிலையே ஒப்பிலா முருகன்
மாமு கத்துளொன் றாமவன் தன்மையார் வகுப்பார்.

தாமரைக் கண்ணன் விஷ்ணு முதலிய கடவுளர்க்கும் இன்ப நெறியாகும் வேதங்கள் எல்லாவற்றிக்கும் முற்பட்டு ஆதியாய் விளங்கிடுகின்ற ஓம் எனப்படும் பிரணவமே அப்பனுடைய ஒப்பிலாத ஆறு திருமுகங்களில் ஒன்றாகும் என்றால் அவன் தம்மை இவ்வண்ணம் ஆவது என யார் வகுத்து உரைப்பார்கள்.

பிரணவ சொரும்பம் யாவர்க்கும் அறியொணாத மூலப்பொருளாக விளங்கிடலால் அதுவே ஐயனின் திருமுகம் ஒன்றாதலின் எவ்வாறு அவன் பெருமை உணர முடியும் அல்லது சொல்ல முடியும்.

முக்கண் மூர்த்தியும் ஆங்கவன் முண்டகா சனனுஞ்
சக்க ரப்படை அண்ணலும் ஆங்கவன் தானே
திக்குப் பாலருங் கதிர்களும் முனிவருஞ் சிறப்பின்
மிக்க தேவரும ஆங்கவன் யாவர்க்கும் மேலோன்

மூன்று கண்ணுடைய சிவமூர்த்தியும் அவனே. தாமரை மீதிலிருக்கும் பிரமனும் அவனே சக்கரப்படையுடைய பகவான் நாராயணனும் அவன் தானே திக்குப்பாலகரான இந்திரன் அக்கினி யமன்நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானன் அவன். சூரிய சந்திரரும் மூனிவரும் சிறப்பின் மிகுந்த தேவரும் அவன் ஆனால்இவர் யாவர்க்கும்மேலானவன்

ஈட்டு மன்னுயிர் எவற்றிற்கும் இருவினைப் பயனைக்
கூட்டு வானவன் ஆங்கவை துலையெனக் கூடின்
வேட்ட மேனிலைக் கதிபுரி வானவன் மேலாய்க்
காட்டு வான்முதல் திறமெலாம் ஆங்கவன் கண்டாய்.

உலகில் பிறவியெடுத்துள்ள பல உயிர்கள் எவற்றிற்கும் நல்வினை தீவினையின் பயனைக் கூட்டிவைப்பான் அவன். அந்த நல்வினையும் தீவினையும் தராசு போன்று சமமாகும் அல்லது ஒப்பாகும் நேரத்தில் அவ்வுயிர்களை மிக உயர்வான மேலாம் இன்பநிலையில் வைப்பவன் அவன்; இன்னும் மேலாக நாம் காணும்படி காட்டுவானும் காண்பானும் காட்சிப் பொருள் ஆகிய அனைத்தும் அங்கு அவனே என்பதை நீ காண்பாயாக; முழுவதும் உண்மையானது அவனே என்பதை அறிவாயாக. ஆனால் அறிய முடியாதவன்.

சிறுவன் போலுறும் குரவனே போலுறும் நினையில்
குறியின் போலுறும் நெடியவ னாகியுங் குறுகும்
நெறியின் ... ன்னெணம் வேறுபல் லுருக்கொடு நிலவும்
அறிவர் நாடருங் கந்தவேள் ஆடலார் அறிவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவன் போல் வடிவாவான், தந்தை போலாவான், குருவாவான் தினையிலும் குறியவனுவான். நெடிய வடிவாகி நிமிருவான், சிறுகத் தோன்றுவான், முறையாக இவ்வண்ணம் பல வடிவு கொண்டு நிலவுவான். அவன் தம்மையை எல்லாம் அறியும் அறிவாளிகளாலும் அறியொணுத பரமஇரகசியமாதலின்கந்தசுவாமியின் ஆடலை யார் அறிவார்.

சிவன தாடலின் வடிவமாய் உற்றிடுஞ் செவ்வேள்
அவன தாணையின் அன்றியே பெயர்கிலா தணுவும்
எவர் அவன்றனி ஆற்றலைக் கடந்தவர் இவண்நீ
தவம யங்கினை அவன் தனி மாயையிற் சார்வாய்

சிவபிரானின் ஆடலாக விளங்கும் வடிவாகி நிற்கின்ற செவ்வொளியுடைய பகவானின் ஆணையின்றி அணுவும் அசையாது எனின் எவர்தாம் அவனுடைய தனியாற்றலைக் கடந்தவர். சூரனே நீ பெரும் தவம் செய்தாய். தவத்தைச் செய்தும் உண்மை உணராது மயங்குகின்றுய். இந்த உனது மயக்கம் தானும் அப் பகவானுடைய தனியான மாயையின் மயக்கத்தின் வண்ணமே. நீ மயங்குகின்ருய், அதை நீ அறிவாயோ

அவனை அறியாது நீ இப்படி மயங்குதலும் அவனது மாயையில் அகப்பட்டதால் என்பதை அறி அவன் இல்லாமல் நீ இல்லை என்பதை அறி. என்பதை தெரியப்படுத்துகிறுர் வீரவாகுதேவர்:

எல்லை இல்லதோர் பொருளெலாம் ஆகுறும் மியாவும்
அல்ல ணுகியும் இருந்திடும் அருவமு மாகும்
பல்வ கைப்படும் உருக்கொளும் புதியரிற் பயிலுந்
தொல்லை யாதியாம் அநாதியும் ஆகியே தோன்றும்.

எல்லையில்லாத பொருளாகவும் இருப்பார். யாவும் இல்லாதவனுகவும் இருப்பர், அருவாகித் தோன்ருததாகியும் ஆவர். அன்றியும் பலவகைப்படும் உருவங்களையும் கொள்வர், புதியோராகவும் புதுமையுடன் தோன்றிடுவர். மிக முதியோரான ஆதிக் கடவுளர்க்கும் அவற்கும் முதலான அநாதியுமாகியே தோன்றும்:

வாரி வீழ்தரும் புன்னுனித் துள்ளிகண் மான
நேரி லாதமர் குமரவேள் நெடியபேர் உருவின்
ஒரு ரோமத்தின் உலப்பிலா ஆண்டங்கள் உதிக்கும்
ஆர வன்றிரு மேனியின் பெருமையை அறிவார்,

மழையால் வீழ்கின்ற போது புல்லின் நுனியில் தொங்கும் துளிகளை ஒப்ப இப் புவனமெங்குமாய் நிறைந்தருளுகின்ற குமரப்பெருமான் நெடியதான பெரிய உருவிலே ஓர் உரோமத்தில் அளவுபடுத்த முடியாதபல அண்டங்கள் உதித்துத் தோன்றி நிற்கும். யார்தான் அவனுடைய திருமேனியின் பெருமையை அறிவார்:

தொலைவி லாவுயிர்த் தொகுதியுந் தொல்லையைம் பூதத்
தலகி லண்டமும் ஏனவும் ஆதியங் குமரன்
நிலைகொள் மேனியின் நிவர் தரும் உரோமத்தின் நின்றே
உலவை யின்றிமுன் னுதித்திடும் இறுதிநாள் ஒடுங்கும்

தொலைவு இலாது பெருகும் பல உயிர்த் தொகுதியும் மிகப் பழமையான ஐந்து பூதங்களாய அளவிலாத அண்டங்களும் ஏனைய பொருள்களும் யாவும் ஆதியான குமரப் பெருமானின் குறைவிலா நிறைவாகும் நிலையான திருமேனி மேல் சிறந்திருக்கும் ஓர் உரோமத்தில் நின்று ஒழிவின்றி உதித்திடும் முடிவு நாளில் வந்தவாறு அதனில் ஒடுங்கும்.

ஆவ தாகிய வடிவத்தின் அகிலமுஞ் செறிந்து
மேவு மந்நிலை அனையனே அல்லது வேறிங்
கேவர் கண்டனர் அவ்வுரு வியற்கையை எங்கோன்
தேவர் யாவர்க்குங் காட்டிடக் கண்டனர் சிறிது.

அவ்வாருகிய வடிவத்தால் அகில உலகமும் செறிந்து மேவி விளங்கும் அறியொணுத அந்த நிலையினை அப்பகவானே காண்பான் அல்லது வேறு யார்தான் கண்டனர். ஒருவரும் இலை. அந்த திருவுருவின் இயற்கையை எம்பிரான் தேவர்கள் யாவர்க்கும் காட்டிடச் சிறிது அத்தேவர் கண்டனர்.

தண்டல் இல்லதோர் ஒன்றெுரு மயிர்நுனித் தலையின்
அண்ட மெண்ணில கோடிகள் கோவைபட் டசையப்
பண்டு மேருவிற் கந்தவேள் கொண்டதோர் படிவங்
கண்டி லாய்கொலாங் கணிப்பிலாப் பவம்புரி கடியோய்.

குறைவு ஏதும் இல்லாததோர் எம்பிரானது ஒன்ருகும் திருமேனியில் ஓர் மயிர் நுனியின் உச்சியில் அண்டங்கள் எண்ணில கோடி கோர்வையாகப் பொருந்தி அசைந்திடும் வண்ணமாக முன்னர் முருகப்பிரான் மேரு மலையினிடத்து கொண்டதோர் அருள் நிறைந்த திருப்பெரு வடிவத்தை நீ கண்டிலாய் போலும் அளவு கணக்கிலாத பெரும் பாவங்களைப் புரியும் கொடிய சூரனே.

அன்று கந்தவேள் அமைத்ததோர் பெருவடி வதனுள்
ஒன்று ரோமத்தின் இருந்ததற் காற்றிடா துனதாய்த்
துன்றும் ஆயிரத் தெட்டெனும் அண்டமாந் தொகையும்
இன்று நீயது தெரிகிலை சிறுவனென் றிசைத்தாய்,

அன்று முருகப்பிரான் தானுக எங்கும் வளர்ந்து நின்றதோர் பெருவடிவம் அதனுளே ஒன்ருகும் ஓர் உரோமத்தின் இருந்த அண்டங்களுக்கு இணையாகாது உனதாய் நீ பெற்றுக்கொண்டவன் என பெருமைப்படும் ஆயிரத்தெட்டெனும் அண்டமாகிய தொகைகள் என்பதை நீ தெரிந்திடாது சிறுவன் எனச் சொல்லினுய்.

அளப்ப ருங்குணத் தாதியாம் எம்பிரான் அமரர்
தளைப்ப டுஞ்சிறை மாற்றவுஞ் சதுர்முகன் முதலோர்
கொளப்ப டுந்துயர் அகற்றவுங் கொடியரை அறுத்து
வளப்ப டும்பரி சுலகெலாம் போற்றவும் வந்தான்.

இவ்வாறு எவருடைய சிந்தையாலும் அளத்தற்கரிய பெருங் குணமுடைய ஆதியான எம்பிரான் தேவர்கள் விலங்கில் இடப்பட்ட சிறையை நீக்கவும், பிரமதேவன் முதலியகடவுளரால் அனுபவிக்கப்படுகின்ற துன்பங்களை அகற்றவும் கொடியோர்களை அறுத்து நீக்கி வளமாகும் பரிசால் உலகெல்லாவற்றையும் காத்தருளும்படி வந்தருளியிருக்கின்ருர்.

வீரவாகு தேவர் இவை கூறிட சூரன் அது கேட்டுப் பொருதவனுகி தன் முன் வந்து தன்னை அவமதித்தான் இத்தூதுவன் எனக்கூறி அவனை சிறைப்படுத்தும் படி தனது ஏவலர்க்கு சேனைக்கு பணிக்கின்ருன்.

அவன் சொற்படி அவரைச் சிறைப் படுத்தச் சென்ற அசுரரை வீரவாகு தேவர் பிடித்துக் கொன்று சூரன் காணும்படி அவன் முன் விசி விட்டு திருச் செந்தூர் புறப்படு கின்ருர். அவரை போக விடாது பிடித்திடும் படி சூரன் ஏவிய படைகளைக் கொன்று நகரை அழித்து அவனது இளங் குமரரையுங் கொன்று வீரவாகு தேவர் திருச்செந்தூர் மீள்கின்ருர்,

இது கண்டு திகிலுற்ற சூரன் தனது தம்பி சிங்கன் தனது மக்கள் பாநு கோபன் இரணியன் அக்கினி முகன் சேனுதி பதிகள் மந்திரி தரும கோபன் முதலிய அசுரரை அழைத்து தமது இந்த நிலையில் மேற்கொண்டு செய்வன யாது என வினவுகின்ருன்.

அவர்களில் பலரும் குழந்தையான முருகனுடன் போர் செய்தலே நன்று எனக் கூற சூரனது தம்பி சிங்கன் மட்டும் சூரனை நோக்கி முருகன் குழந்தையல்ல அது பரம் பொருளான கடவுள் என எடுத்துக் கூறும் பகுதி.

வாலி தாமதிச் சடிலமும் பவளமால் வரையே
போலும் மேனியும் முக்கணும் நாற்பெரும் புயமும்
நீல மாமணிக் கண்டமுங் கொண்டுநின் றனலுல்
மூல காரணம் இல்லதோர் பராபர முதல்வன்.

மிகவும் அழகுடைய இளம் பிறை அணிந்த திருச்சடை முடியும் பவளமாகும் பெரு மலையே போலும் திருமேனியும், மூன்று கண்களும் நான்கு பெரிய தோள்களும் நீல நிறமுடைய மணி கண்டமும் கொண்டு அன்றும் இன்றும் என்றும் நின்று கொண்டான் தனக்கு மூலமாகும் ஒரு பொருளாய காரணம் ஏதும் இல்லாத முதல்வனுகும் சிவன்:

தன்னை நேரிலாப் பரம்பொருள் தனியுருக் கொண்ட
தென்ன காரணம் என்றியேல் ஐந்தொழில் இயற்றி
முன்னை யாருயிர்ப் பாசங்கள் முழுவதும் அகற்றிப்
பின்னை விடுபே றருளுவான் நினைந்தபே ரருளே.

தனக்கு வேறு யாரும் நேரில்லாத அறிதற்கரிய பரப்பொருளாகும் பெருமான் இவ்வண்ணம் சடைமருங்கில் இளம்பிறையும், தனி விழிக்கும் திருநுதலும் திருப்புயங்கள் நான்குமாகும் தனியான ஓர் உருவைக் கொண்டது என்ன காரணம் என்று கேட்டால் படைத்தல் காத்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐந்து தொழில்களையும் செய்து இருளாய மூடத்தில் கிடக்கும் முன்னைய அரிய உயிர்களின் பந்த பாசங்களை நீக்கி எல்லையற்ற இன்பமென்னும் முத்தியான பேற்றை அருள் புரியும் படியாக நினைந்து கொண்ட அளவிறந்த கருணையாகும் பேரருளே என்பதை அறிவாயாக.

அப்ப ரன்றனை உன்னியே அளவைதீர் காலம்
மெய்ப்பெ ருந்தவம் இயற்றினை அதுகண்டு வெளிபட்
டொப்பி லாவர முதவியே ஆங்கதற் கொழிவுஞ்
செப்பி வைத்தனன் தேர்ந்திலை போலுமத் திறனே

அவ்வாருன எல்லார்க்கும் முதல்வனுகும் பரமனையே நினைந்து நீ அளவிறந்த காலமாக உண்மையான பெரும் தவத்தைச் செய்தாய் அதனை எம்பிரான் கண்டருளி உனக்கு முன்பு வெளிப்பட்டு இதுகாறும் எவரும் பெற்றிடாத ஒப்பிலாத வரங்களை தந்து அந்த வரப்பேற்ருல் வரும் உமது வாழ்க்கைக்கு முடிவாகும் காலத்தையும் சொல்லியருளி வைத்தார்' ஆனுல் நீ அவைகளை மனதில் தெளிந்து கொள்ளவில்லை

பெறல ருந்திரு வுடையநீ அறத்தினைப் பேணி
முறைபு ரிந்திடா தாற்றலால் அமரரை முனிந்து
சிறையில் வைத்தனை அதுகண்டு நின்வலி சிந்தி
இறுதி செய்திட உன்னினன் யாவர்க்கும் ஈசன்

எவராலும் பெறுதற்கரிய திருவைப் பெற்றுக் கொண்ட நீ தருமத்தைக் கடைப்பிடித்துப் பேணி அரசு செய்திடாதிருக்கும் அந்த நிலையால் தேவர்களை உனது வலியால் வென்று பகையாகி அவர்களைச் சிறையிலே வைத்தாய். அதனை எம்பிரான் கண்டருளி உனது வலியை நீக்கி உன்னை முடிவு செய்திடவும் எண்ணினுன் எல்லார்க்கும் ஈசனுகும் பெருமான்..

வரம ளித்தயாம் அழிப்பது முறையன்று வரத்தால்
பெருமை பெற்றுள சூரனை அடுவது பிறர்க்கும்
அரிதெ னப்பரன் உன்னியே தன்னுரு வாகும்
ஒருமக ற்கொடு முடித்துமென் றுன்னினுன் உளத்தில்,

உனக்கு வரத்தினைக் கொடுத்த நாம் உன்னை அழிவு செய்வது முறையன்று என திருவுளத்து கொண்ட கருணையாலும்; தனது வரங்களால் வலியுடன் சிறந்திருக்கும் சூரனைக் கொல்வது பிறருக்கும் அரிதாகும் என பரமாகும் ஈசன் எண்ணியருளி தனது உருவாகும் ஓர் குமரனைக் கொண்டு உன்னை முடிவு செய்வோமென திருவுளத்து எண்ணியருளினுர்.

செந்நி றத்திரு மேனியுந் திருமுக மாறும்
அன்ன தற்கிரு தொகையுடைத் தோள்களு மாக
முன்ன வர்க்குமுன் னுகிய பராபர முதல்வன்
தன்னு தற்கணுல் ஒருதனிக் குமரனைத் தந்தான்.

ஆதலின் அதற்கிணங்க சிவந்த ஒளியாய் பரவுகின்ற திருமேனியும் திருமுகங்கள் ஆறும் பன்னிரண்டு தொகையுடைய திருத்தோள்களுமாக முற்பட்டார் எல்லார்க்கும் முன்னவராய் எல்லாமாய் அல்லவுமாய் இருக்கும் முதல்வன் ஓர் திருவுருவம் கொண்டு தனது நெற்றிக் கண்ணுல் ஒரு தனியாகும் குமரனைத் தந்தருளினுன்

மானு டத்தரில் விலங்கினில் புட்களில் மற்றும்
ஊன முற்றுழல் யாக்கையின் பிறந்துளார் ஒப்ப
நீ நினைக்கலை பரஞ்சுடர் நெற்றியந் தலத்தே
தானு தித்தனன் மறைகளுங் கடந்தோர் தலைவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறு தோற்றியருளிய தன்னந் தனியான குமரனை இவ்வுலகில் உள்ள மனிதர்களிலோ அல்லது மிருகங்களிடமோ அன்றி பறவைகளிடமோ இதுவன்றி மற்றும் ஊனப்பட்டு உழன்று திரியும் உடலில் பிறந்துளார் போன்று நீ நினைந்து கொள்ளாதே, பரஞ்சோதியாகும் சிவபெருமானின் நெற்றியம்தலத்து தான்உதித்தருளினர் வேதங்களும் காண்பரியதாய் யாவையும் கடந்து நின்ற ஓர் கடவுளாகும் குமரன்.

சீல மில்லவர்க் குணரவொண் ணாதசிற் பரனைப்
பால னென்றனை அவனிடத் திற்பல பொருளும்
மேலை நாள்வந்து தோற்றிய சிறியதோர் வித்தின்
ஆலம் யாவையும் ஒடுங்கியே அவதரித் ததுபோல்.

வாழ்க்கையில் சீலம் இல்லாதார்க்கு எந் நிலையாலும் உணரமுடியாதபடி ஞானவடிவாயிருக்கின்ற பெருமானை நீ பாலன் என்று கூறினய்: அந்தப் பாலன் இடத்தில்தான் உலகு முதற்பல பொருளும் முன்னுளில் வந்து தோன்றியது. எப்படியெனின் சிறியதொரு ஆலம் வித்திலே பெரிய ஆலமரம் அடங்கியிருந்து பின்னர் வானளவ முளைத்தெழுகின்ற தன்மை போன்று பார் பதம் அண்டம் யாவுமாய் முளைத்தெழுந்து பரந்தவன் அவனே என அறிவாய்.

அருவு மாகுவன் உருவமு மாகுவன் அருவும்
உருவு மில்லதோர் தன்மையும் ஆகுவன் ஊழின்
கருமம் ஆகுவன் நிமித்தமு மாகுவன் கண்டாய்
பரம னாடலை யாவரே பகர்ந்திடற் பாலர்.

அப்பாலன் அருவமாய் தோன்ருதாயும் இருப்பான். தோன்றிடும் உருவமுமாகுவான்: அருவமும் உருவமும் இல்லாத தன்மையும் ஆகுவன்: ஒவ்வோர் செயலும் நடைபெறற்குரிய ஊழின் கருமங்களும் அவ்வாறு அவைகள் நிகழ்வதற்கு உரிய நிமித்தமாகும் முன் ஏதுவும் ஆகுவன் காண்பாயாக: அம்மவோ பரமாகும் பாலன் ஆடலை யாவர்தான் எடுத்துச் சொல்லிட முடியும்? முடியாதே.

வேதக் காட்சிக்கும் உபநிடத் துச்சியில் விரித்த
போதக் காட்சிக்குங் காணலன் புதியரில் புதியன்
மூதக் காரக்குமூ தக்கவன் முடிவிற்கு முடிவாய்
ஆதிக் காதியாய் உயிர்க்குயி ராய்நின்ற அமலன்

அவன் வேதங்கள் இவ்வண்ணமாகுவன் என எடுத்து ஓதிடுகின்ற காட்சிகளும் உபநிடதங்களின் முடிவாகும் உயர் நிலையாகப் பேசப்படும் ஞானக் காட்சிக்கும் காணப்படாதவன், முன்னையோராய்மூத்துள்ள கடவுளர் யார்க்கும் மூத்தவனுய் பின்னராக முடிவு என்பதன் முடிவாகி ஆதிக்கு ஆதியாகி உயிர்கட்கு உயிராகி நின்ற நின்மலமாகும் சோதியாயவன்.

ஞானந் தானுரு வாகிய நாயகன் இயல்பை
யானும் நீயுமாய் இசைத்துமென் ருலஃ தெளிதோ
மோனந் தீர்க்கலா முனிவருந் தேற்றிலர் முழுதுந்
தானுங் காண்கிலன் இன்னமுந் தன்பெருந் தலைமை.

ஞானமே தனது திருவுருவம் ஆகிய நாயகனின் இயல்பை இவ்வணமானது இத்தகைத்தாயது என பொல்லாங்கினுல் நிரம்பப்பெற்ற வாழ்வுடைய யானும் நீயுமாக பேசிடுவோம் என்ருல் அது எளிதாகிய காரியமோ? அவனது இயல்பை வாழ்வில் எல்லாப்பற்றினையும் நீக்கி பேச்சிறந்த மௌன விரதத்தை நீக்கிடாது நிற்கும் முனிவர்களும் அறியமாட்டார்கள். அஃதன்றி அப்பகவானே இன்னமும் தானும் காணமாட்டான் தன்னுடைய தலையாய பெருநிலை.

தத்த மாற்றங்கள் நிறுவிய சமயிகள் பலருங்
கத்து புன்சொலை வினவினர் அவன்செயல் காணுர்
சுத்த வாதுள முதலிய தந்திரத் தொகுதி
உய்த்து ணர்ந்திடு நீரரே ஒருசிறி துணர்வார்.

தங்கள் தங்கள் சமய நீதிகள் தான் சரியென அதனையே நிறுவ முற்படும் சமயவாதிகள் மதகுருமார்களும் யாவரும் தாங்கள் கொண்டுள்ள கற்பனையினுல் எழுந்த வீண் சொற்களை வாதிட்டும் கேட்டும் பிரசங்கித்தும் நின்ருர்களே ஒழிய அவனுடைய செயலை உண்மையாம்படி காண்கிலர். ஆனுல் தூயதான வாதுள ஆகமம் முதலிய தந்திரங்களில் சொல்லிய நெறிப்படி ஒழுக்கம் கொண்டு அந்த ஒழுக்கத்தால் விளையும் விழுப்ப நிலையாய உணர்வு சேரப்பெற்ற அருள் நீர்மை உடையரே அவன் இயல்பை ஒரு சிறிது உணர்வார்கள்.

கருவி மெய்ப்புலன் காட்டுவான் காண்பவன் காட்சிப்
பொருளெ னப்படு நான்மையும் ஐவகைப் பொறியும்
இருதி றத்தியல் வினைகளுங் காலமும் இடனும்
மரபின் முற்றுறு பயனுமாய் நின்றனன் வள்ளல்.

காண்பார்க்கு உற்ற கருவிகளாகும்உடலின் புலங்களும் காட்டுவானும் காண்பவனும் காட்சிகளும் எனவாகும் பொருளாகிய நான்கும் ஐந்து பொறிகளும் நல்வினை தீவினையான இருதிறத்து செயல்பட்டுவரும் வினைகளும் காலங்களும் இன்னும் இவற்றினுல் உயிர்கள் செய்யும் கருமங்களால் விளையும் பயன்களுமாக நின்ருன் எமது அருள்வள்ளலான முருகப்பிரான் என அறிவாயாக.

ஞால முள்ளதோர் பரம்பொருள் நாமெனப் புகலும்
மாலும் வேதனும் மாயையாம் வரம்பினுட் பட்டார்
மூல மாகிய தத்துவ முழுவதும் கடந்து
மேலு யர்ந்திடு தனிமுத லவன் அன்றி வேருர்.

இப் பூமியில் உள்ளதோர் பரம்பொருள் நாம் தான் எனப் புகல்கின்ற நாரயணக் கடவுளும் பிரமதேவனும் அவ்வாறு தம்மையே பரமென சொல்கின்றமையால் அவர்களும் மாயையின் எல்லைக்குள் அகப்பட்டவராயினுர்கள். உடம்பிற்கு மூலாமகிய தத்துவங்கள் தொண்ணூற்ருறும் கடந்து மிக மேலாகி ஈறு காண்பரியதாய் நின்றிட்டதனி முதல் அப்பாலனேயன்றி வேறு யார்?

தூய பார்முத லாகவே குடிலையின் துணையுங்
மேய அண்டமும் உயிர்களும் வியன்பொருள் பலவு
மாயும் நின் றனன் அல்லனு மாயினன் அவன்றன்
மாயை யாவரே கடந்தனர் மறைகளும் மயங்கும்.

தூயதான பூமி முதலாக பூமியின் தோற்ற விரிவிற்கு ஏதுவாகும் முதற்பொருளாகிய குடிலை எனும் ஓங்காரம் வரையில் இடையில் பொருந்தியிருக்கும் அண்டங்களும் உயிர்களும் மேலாகிய அற்புதமுடைய பொருள்கள் பலவும் ஆகவும் அவன் நிற்கின்ருன். அப்பொருள்கள் அல்லாதவனுகவுமாயினுன். ஆதலினுல் அவனுடைய மாயை யார்தான் கடந்துள்ளார்கள். வேதங்களும் சொல்லிட முடியாது தடுமாறும்.

இன்ன தன்மைசேர் முதல்வனைச் சிறுவனென் றிகழ்ந்து
பன்னு கின்றனை அவுணர்தங் கிளையெலாம் படுத்து
நின்னை யுந்தடிந் திடுவனோர் இமைப்பினின் நிரப்புந்
தன்ன ருட்டிறங் காட்டுவான் வந்தனன் சமர்மேல்.

இன்னதன்மை சேர்ந்துள்ள முதல்வனை நீ சிறுவன் என ஏளனமாகப் பேசிடுகின்ருய், அவனே தான் நினைத்தால் இந்த அசுரர் கிளைகளை வேரோடு மடியச் செய்து உன்னையும் ஓர் இமைப்பொழுதினில் முடிவாக்குவான்: ஆனுல் அவ்வண்ணம் செய்யாதபடி நிரம்பி எங்கும் வழிந்திடுகின்ற கருணையென்னும் அருட்திறத்தை எல்லார்க்கும் காட்டும்படியாக இங்கு எழுந்தருளி வந்திருக்கின்ருன்: அண்ணனே அளவிறந்து நிறைகின்ற கருணையுடையவன். அதனை அறி.

அற்றம் இல்வகை ஆயிரத் தெட்டெனும் அண்டம்
பெற்ற னம்மென வியந்தனை தத்துவ பேதம்
முற்று ணர்ந்திலை தரணியோ அளப்பில வுளகாண்
மற்றை அண்டங்கள் கேட்டியேல் மருளுதி மன்னே.

குற்றமில்லாத ஆயிரத்தெட்டு அண்டங்களையும் அரசாளும் பேறுபெற்றனன் என்று மனதில் நீ எண்ணி உன்னையே வியந்துகொண்டாய்; தத்துவங்களின் பேதங்கள் முழுவதின் இயல்பையும் நீ அறிந்தாயில்லை. இங்கு வானில் பூமிகளின் தொகைக்கு அளவில்லையென கண்டு கொள்வாய், அண்டங்கள் ஆயிரத்தெட்டுடன் மட்டுமன்று. அம்மவோ மற்றைய தான அண்டங்களின் இயல்பை நீ கேட்டால் மயங்கிப்போவாயே.

குடிலை யீறதா வாரியே முதலதாக் குழுமி
யுடைய அண்டங்கள் அலகில என்பரென் றென்றின்
அடைத லுற்றிடு புவனத்தின் பெருமையார் அறிந்தார்
முடிவு ருததோர் பொருளினை முடிவுகூ றவற்றே.

குடிலை என்னும் பதநிலை முடியும் வரையும் பூமி முதல் தொடக்கமிருந்து காணப்பெறும் அண்டங்கள் அளவிறந்தன எனச் சொல்லுவார்கள்; ஒன்றில் ஒன்று தங்கியவாறு நூற்றெரு கோடியின் மேற்பட விரிந்துள்ள அண்டங்களின் வளமுடைய பெரும் காட்சியின் அளப்பரும் தன்மையை யார் அறிந்தார். அது முடிவுருத ஓர் பொருளாகும். முடிவுருத பொருளை முடிவு கூறிட எம்மால் முடியுமோ? அது ஆகாது.

அன்ன தாகிய அண்டங்கள் அனந்தகோ டியையும்
தன்ன தாணையால் ஓரிமைப் பொழுதினில் தரவும்
பின்னர் மாற்றவும் வல்லதோர் ஆதியம் பிரான்காண்
உன்னொ டேபொரும் ஆடலாற் செந்திவந் துற்ருன்

அவ்வாருன அண்டங்கள் அனந்த கோடிகளையும் தன்னுடைய ஆணையால் ஓர் இமைப்பொழுதில் படைத்திடவும் பின்னர் அழித்திடவும் செய்யவல்லதொரு ஆதியான பெருமானே நீ கண்டுகொள் உன்னுேடு போர் செய்திடும் ஓர் திருவிளையாடலை எண்ணித் திருச்செந்தூர் என்னும் பதி வந்துற்ருர்:

காத்தும் படைத்தும் கரந்தும் விளையாட வல்ல எல்லார்க்கும் மூலமான கடவுள் உன்னுேடு போர் செய்வது தமக்கு ஓர் ஆடலாகக்கொண்டு செந்தியில் வந்து அமர்ந்திருக்கின்ருன். அதனை அறிவாயாக.

# தனது சுற்றமும் தான் முழுவதும் தமிழ் ஆன எம்பிரான் சம்பந்தன்

தமிழ் என்னும் மொழி உருவுடன் இவ்வுலகில் தோன்றி அருள்வடிவாய் தனது தரும விளக்கமுடன் தூய ஞான ஒளி பரப்பி எல்லா உலகத்தையும் இங்கு பார் எனது எழிலை அருள் நிலையை தவச்செறிவை எனக் காட்டும்படி அன்று அவதரித்தது என்ருல் அதுவே எம்பிரான் ஞானசம்பந்தனுகும்.

இப்படியான கருத்துடன் தம்மை திருஞானசம்பந்தர் சொல்கின்ருர், தமிழ்ஞானசம்பந்தன் செந்தமிழின் சம்பந்தன் தமிழ் சுற்றும் முற்றுமாயினுன் என்றெல்லாம் என்ன அழகாக என்ன உறுதியாக என்ன தவத்தின் உயர்வாக ஞானமாக நீதியாக தன்னையே தமிழின் வடிவாக சொல்கின்ருர் சம்பந்தர்.

வேதங்கள் ஆரிய மொழி மூலம் வடக்கே முதல் பிரகாசித்தது. அதே வேதம் தமிழ் மொழியால் தெற்கே பிரகாசித்தது என்ருல் அதுதான் எம்பிரான் ஞானசம்பந்தனுடைய திருவாக்காகும், முற்றிலும் முற்றிலும் தம்மை அன்புருவாக்கி அருள் குழைந்த எழில்வாக்காக்கி தமது [illegible] நாய்களாம் நமக்கு உண்டு சுவைக்க ஓதிச் [illegible] தம் வைத்துப் போயிருக்கின்ருர் எம்பிரான் ஞானசம்பந்தர்.

உண்மையில் யோகசுவாமிகள் வந்திராதிருந்தால் எனது நிலையில் ஞானசம்பந்தனை இவ்வளவு தெளிவாக அறியோம்; அவருடைய தவத்தின் அருள் பார்வை அடியோம் மீது விழுந்ததால் நான் போகின்ற உலகப் போக்கை மிலேச்ச நாகரீகத்தின் கார் கண்ணுடி கால்சட்டை மேல்சட்டை கைவாச்சு ரான்சிஸ்ரர் அல்சேசன் நாய் ஒலிபெருக்கி ஊத்தைக்கூடை பணிப்பெண் பணியாளன் கண்ணுடி அலுமாரி மனைவியுடன் கைகோத்து உலகவாகி அம்மாவாம்மா மைடார்லிங் என்றெல்லாம் வீண்பொழுது போக்காது நமது முன்னைப் பெரியோரைப் பற்றிச் சிந்திக்க ஒரு கணம் தியானிக்க ஓர் வாய்ப்பு வந்தது.

அன்று ஒருநாள் யோகசுவாமின் கட்டளைப்படி சிவதொண்டன் நிலையத்தில் சென்று கந்தபுராணம் பெரிய புராணத்திற்கு பயன் சொன்னேன். அது கிட்டதட்ட 5 வருட காலம் நடைபெற்றது. அப்பொழுது சிலர் அங்கு என் பணி நன்றல்ல எனக் [illegible] தவருன கருத்துக்களை பரப்ப முயன்றனர்.

யோகசுவாமி என்னை நீ சிவதொண்டன் நிலையம் போகக் கூடாது என்ருர். அக்கால் உடம்பிலும் நோய் இந்த ஒரு பய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறுத்தல். இவை எல்லாம் சேர்ந்து எனக்கு கவலையை எந்நேரமும் தந்துநின்றது. இதனால் மீண்டும் யோகசுவாமியிடம் சென்று நான் ஏதும் தவறு புரிந்தால் மன்னியுங்கள் என வேண்டிக் கொள்ளும்படி கொழும்புத்துறைக்குப் போனேன். அங்கு போய் சுவாமியைக் கண்டேன் சிறிது கதைத்தார். சிவதொண்டன் கதை பேசவில்லை. ஆனால் எனக்கு நீ பிழை செய்யவில்லை. நான் மன்னிக்க வேண்டியதில்லை என்றார். எனக்கு அப் பதில் திருப்தி தரவில்லை, மனம் வேதனை உற்றவாறு நின்றது. பின்னர் இப்பொழுது எல்லாம் மாங்கன்றில் ஒட்டுருங்களாம் அவை கெதியிலை காய்த்துப்பழுக்குதாம் என்று கூறினார். சரி நீர் வாரும் என்றார். அதையும் விளங்காது என் திகில் அகலாது வீடு நோக்கி வந்தேன்.

இதற்குமுன் சிவதொண்டன் நிலையத்து நான் பயன் சொல்லும் காலத்து நான் வீடு வந்து படுத்து நித்திரையாகி அரை விழிப்பில் எனது சிறு குடிசை சிவதொண்டன் நிலையம் போல் தென்படும். இதென்னடா என்றால் உடன் சிறு குடிசை தென்படும்.

அக் காலத்து நமது புத்தகங்களை ஒரு பெட்டியில் போட்டு வைத்திருப்பேன். அந்தப்பெட்டி தலைவாசலில் ஓர் புறமாக இருக்கும், அப்பொழுது ஒரு நாள் எனது மூத்த மகள் சிறு குழந்தையாய் இருந்தவள் என்னிடம் வந்து ஐயா நான் இராத்திரி ஒரு கனவு கண்டேன். உங்களது உந்தப் பெட்டிக்குள் சிவபெருமானும் பார்வதி அம்மையும் வந்து ஊரிப்பட்ட புத்தகம் வைக்க கணக் கண்டனான் என்றாள். அப்பொழுது அவளுக்கு 7 வயதிருக்கும். அவளை நோக்கி உனக்கென்னென்றடி சிவபெருமானைத் தெரியும் என்றேன். அப்பொழுது அவள் முன்பிருந்த சிவன் அம்மை படத்தைச் சுட்டிக் காட்டி அவை போல ஆட்கள் தான் என்றாள். நீ போடி விசரி உது விசரில் கணக் கண்டாய் என்று வேடிக்கை பேசினேன, அந்தப் பிள்ளை இப்பொழுது விவாகமாகி விட்டாள். ஆனால் எனது சிறு குடிசை முழுவதும் கந்தபுராணம் பெரிய புராணமாக நிரம்பப் பெற்றது, அது மட்டன்றி இந்த உலகில் எனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லாத ஒரு சைவனாக நான் இன்று வாழ்க்கை மாறினேன்.

யோகசுவாமி அன்று ஒட்டுமாங்கன்று கதை பேசினாரே அந்த ஒட்டுத்தான் இன்று சந்திரதீபம் என்பதை நான் இன்று உணர்கின்றேன். உண்மையில் சந்திரதீபம் சிவசம்பந்தமானதே அன்றி அது ஒரு காலமும் அவசம்பந்தம் உடையதன்று. புண்ணியம் நிறைவுடைய பெரியோர்க்கு இது விளங்கும், பொய் சொல்லி மனுச் செய்து காசு பெற்று ஏமாற்றிப் புறங்கூறிக் காசு பெற்று பொய் வழக்குப் பேசிக் காசு பெற்று நீதியல்லாவகை காசு பெற்று வீடு கட்டி மிகு உல்லாசமுடன் இன்னம் இன்னம் பொருள் அவாவிட்டு நீங்காத பாவிகட்கு இப்பத்திரிகை பற்றி தவறான அபிப்பிராயம் தோன்றக் கூடும். அதற்கு நாம் அக்கறை கொள்ளோம். நாம் ஞானசம்பந்தனை நன்கு விளங்கினோம். ஆகையால் அவன் திருவடித் தொண்டாக நமது பணி தொடர்கிறது. இது முடிந்த முடிபு. தமிழினம் இனித்தான் உயரப் போகிறது. சிலரேனும் உலகம் போன போக்கில் தாம் போகாது உண்மை உணர்ந்து உள்ளம் தெளிவாகி நன்மை தரும் அருள் நெறியை நாடப் போகின்றார், அது இந்த உலகில் சந்திரதீபத்தால் இன்று ஏற்பட்டுக் கொண்டது திருவருள் சம்மதம்.

சமயத்துறையில் சில நூல்களைப்பயின்று நல்ல பேச்சாளராகி தம்மையும் ஏமாற்றிப் பட்டம் பதவியில் இருந்த பெரியோர் என பேதைகளால் போற்றப்பட்ட சிலருக்கும் சந்திரதீபம் காண வேதனையாக இருக்கும். ஏன் என்றால் எங்களை ஒரு வேளை இவன் மிஞ்சி விடுவானோ என்ற அச்சம் மிகைப் படலால் சந்திரதீபத்தை சந்தேகத்துடன் அல்லது பொறாமைக் கண்ணுடன் பார்த்துக் கொள்வர். பலர் இன்று இந்நிலையில் இருப்பாரை நான் அறியாமல் இல்லை.

துர்க்கை கோவிலில் நிர்வாகம் பிழையான வழி நடந்தது நீதியற்ற வழி நடந்தது பொதுமககளிடை பல தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தியது. கன்னிப்பெண்களை உங்கட்கு சீக்கிரம் கலியாணம் வரும் என மொழிந்து பெருமளவு கன்னிப் பெண்களை கோயிலிற்கு செவ்வாய் தோறும் வரச்செய்தது, அதனால் தீங்கு அங்கு தோன்றக் கூடும். இது சைவ நீதியில் அபசாரம். நாயன் மார் காட்டிய அறவழி இது அல்ல என நாம் கருத்து தெரிவித்தோம். அது நமது கடமை. இதை துர்க்கை கோயில் நிர்வாகம் தவறாக எண்ணியது. எத்தனையோ பழியான சொற்களை என்மீது சுமத்தின. நமது பத்திரிகையை தடைசெய்ய வேண்டுமென பெருமுயற்சி எடுத்தன. இதில் தமிழர் விடுதலைக் கூட்டணி பாரளுமன்ற உறுப்பினரும் பங்கு கொண்டனர். தமிழ் காங்கிரஸ் அரசியல் வாதிகளும பங்கு கொண்டனர். எல்லாரும் மிகு மோசமான செயலைச் செய்யவும் வஞ்சனையான செயலைச் செய்யவும் துணிந்தனர்.

நாம் என் செய்யலாம்! நம்மை இப்பணிக்கு ஆளாக்கிய பெருமானிடத்தே முறையிட்டேன், அவன் அருள் ஆங்காங்கு இவர் வஞ்சனைகள் தலைப்படும் இடங்களில் அந்த வஞ்சனையை நீக்கி உண்மையைக் காட்ட உதவியாக இருந்தன.

இன்று நடந்ததென்ன! துர்க்கை கோயில் உள்ளே ஆண் பெண் உடல் உறவு நிகழ்வுற்றது. இதன் பயனாக ஓர் மடப்பள்ளி ஐயர் வேலை நீக்கம் செய்யப்பட்டார். இன்றும் அங்கு வன்செயல்கள் மது அருந்திய நிலையில் வெறியாட்டங்கள் நடைபெற்றன, இதன் விளைவாக அரசாங்கத்திடம் நிர்வாகம் முறையிட்டுள்ளது. இவை இல்லை என்று துர்க்கை கோயில் நிர்வாகம் மறுக்குமோ? தெரியாது.

ஓர் பிழை ஓர் இடத்து நடைபெற்றால் அப்பிழையை நடைபெறவில்லை என மழுப்புவதும்; பிழையைச் சுட்டிக் காட்டினார் மீது கோபங் கொள்ளலும் நீதி உடைய செயல் அல்ல. அது பெருமை உடையதல்ல.

இன்று உலகில் பெருமளவு மக்கள் சினிமா பார்க்கிறார்கள். ஆனால் சினிமா எந்த ஒரு திருவருள் நிலையில் உயரவேண்டும் என நினைப்பார்க்கு பொருந்தாது. அது மிகு கேவலம். புலன் அடக்கம் என்ற ஒரு நிலையில் சினிமா பார்ப்பவன் என்றும் இப்பிறப்பில் மன அடக்கம் பெறான். குண்டலியை வழிப்படுத்தும் யோகியாயினும் அவன் சினிமாவில் புகுந்தால் அவன் தன் நிலையில் மேலாக ஒரு போதும் உயரான். இதனை அருணகிரியார் முருகா எனக்கு யோகம் வேண்டாம் ஞான ஆசாரசிரத்தையே வேண்டும் என பிரார்த்திப்பதால் தெளியலாம். ஆனால் மக்கள் முழுவதும் விரும்பி சினிமா பார்ப்பதால் அதை ஓர் திருவருள் நிலையம் எனலாமோ?

இதே போன்று கலியாணம் சீக்கிரம் பெறும் நோக்கமாக வேறு விடயமாக 7 செவ்வாய் துர்க்கை கோவில் போனால் சரி என்றால் இந்தக் கதை யாழ்ப்பாணத்தில் தீப்பற்றுவது போல் பரக்க பரக்க பெண்கள் திரள் திரளாகப் போவர்.

ஒவ்வொரு குடும்பத்திலும் பல குமர்ப்பெண்கள் உண்டு. உத்தியோகம் கிடைக்காத பொழுது வேளைக்கு திருமணமாக வேண்டும். இந்த சங்கடம் எல்லாக் குடும்பங்களிலும் நிறைய உண்டு, இந்தசந்தர்ப்பத்தில் ஏழு செவ்வாய் போனால் எல்லாம் சுலபமாய் முடியும் என கதை பரப்பினால் எவர் விடுவார். எல்லா யாழ்ப்பாணமக்களும் விடாதை பிடி எனப் போவார்கள். தென்னம்பிள்ளை பாளை திருகி முறுகி வர ஆரோ ஒருவர் எடே சிவபெருமான் தென்னம் பிள்ளைக்கிளாலை காலை நீட்டினார் அற்புதம் அற்புதம் என்று அரோகராச் சொல்லி கற்பூரம் கொளுத்திட ஆளையாள் பார்த்து அரோகராச் சொல்லி கர்ப்பூரம் கொழுத்தினவர். தூரத்துள்ளவர் கார் பிடிச்சுப் போய்ப்பார்த்துக் கும்பிட்டவர் இப்படி பலர் உண்டு.

எழுவை தீவு வேல் ஆனைப்பந்தி தென்னம் பிள்ளை இளவாலை மாதா நாக்காட்டல் துர்க்கை கொயில் கலியாணம் உரும்பிராய் ஒளி காட்டல் இவை யாவும் அவதியுற்ற மனப்பாங்கு உடையார்க்கு அந்தந்த நேர ஆறுதலாக இருக்கப் போகின்றதே ஒழிய வேறு நற்பயன் தராது. அது உறுதி என யாரும் நம்புங்கள்.

அநுமான் வாலாயத்தில் அகப்பட்டு கண்ணாடி கிளாசில் கைவைத்து ஊரப் பண்ணி பதில் கேட்டு வியப்படைந்தோர் பலர் உண்டு, தென் இந்தியாவில் உள்ள திருஞான சம்பந்த மடப் பேதையாகும் பரமாச்சாரியும் அதன் காலில் விழுந்து வணங்கித் தான் மடாதிபதியான பேதைப் பிராமணனும் எல்லாரும் இந்த ஆவி உலக பேச்சுடன் தொடர்பு கொள்ளும் பேதைகள். உண்மையாக இந்த அநுமான் விளையாட்டு ஓர் தீய சக்தி. அது சிலவேளை வியப்பிற்குரிய வகை போல் பல பல வார்த்தை கண்ணாடி ரம்பிளர் விளையாட்டில் காட்டி வீண் பிரச்சனையை பழியை வருவித்து விடும், இப்படி அகப்பட்டு பல பல குடும்பங்கள் நாசமுற்றன, இதனைத் திருநாவுக்கரசர் ''சென்று நாம் சிறு தெய்வம் சேர் வோம் அல்வோம் சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்'' எனப் போற்றுகிறார், அதையாதல் உணருங்கள்.

எனது நண்பரொருவர் கிளிநொச்சியில் வேலை செய்த காலத்தில் தமக்கு ஏற்பட்ட ஓர் அநுபவம் பற்றி விவரித்துச் சொன்னார். அதில் அவர் சொன்னார் கிளிநொச்சியில் ஓர் ஆங்கில வைத்தியர் வீட்டில் இந்தக் கண்ணாடி டம்ளரில் கைவைத்து பதில் கேட்கும் சம்பவம் நடைபெற்றது. எனக்கு அதில் நம்பிக்கை இல்லாத பொழுதும் போய்ப் பார்க்க எண்ணினேன், ஏன் என்றால் அதில் பேசும் ஆவியுடன் நான் ஒரு கேள்வி கேட்கப் போனேன். அந்தக் கேள்வியாதெனின் ஆவியே நீ இந்த வீட்டில் என்னென்று வந்தாய் எனக்கேட்க எண்ணி இருந்தேன்.

ஏன் எனில் அந்த ஆவியுடன் பேசும் ஆங்கில வைத்தியரின் மனைவியின் நடத்தை பற்றி நமக்கு தெரியும், அவள் முன்பு ஒரு கணவனை முடிவு செய்து பின்னர் இந்த வைத்தியருடன் வந்தவள். அதுவன்றி அவளால் பல சச்சரவும் உடைய வீட்டில் எப்படி இந்த ஆவி வருகின்றது எனக் கேட்கப் போனேன். நான் போய் இதை நினைந்து கேட்டேன், அதற்கு வந்த பதில் இந்த விட்டில் அல்லாமல் எந்த வீட்டில் போவது என்று இருந்தது. நான் உண்மையில் எடுபட்டுப் போனேன். அன்று தொடக்கம் பல மாதமாக கிளிநொச்சியில் இந்த ஆவியுடன் பேசிடுவதற்கு நாம் போனோம். என்னபாரும் அது எல்லாம் முடிந்து சில நாளால் எனக்கு நோய் வந்தது. 45 நாள் படுக்கை, தலையில் மயிர் எல்லாம் கொட்டுண்டு பேத்தை வயிற்றுடன் பெரும் துயர நிலை அடைந்தேன். கடைசியில் என் தாயார் எத்தனையோ குருக்களைக் கொண்டு பார்வை பார்ப்பித்து நூல் கட்டி சுகப்பட்டு பின் ஒரு நாள் யோக சுவாமியிடம் போனேன். போன போது தம்பீ! கரியா! எப்படிச் சுகம்: அநுமான் விளையாட்டுக்கும் ஆவியுடன் பேசிடுதற்கும் மனிதன் போவானோ? என்று பேசினார் சுவாமி. நான் இடைமறித்து சொன்னேன். ஐயோ நானும் உண்மையை விளங்கியது இந்த அருளாளரின் கிருபையால். எனக்கு பல காலமாக இந்த சிறு தெய்வ விளையாட்டில் நம்பிக்கை என்நிலையிலும் வராததால் அதில் கலந்திட நான் போவதில்லை.

எல்லாரும் சொல்லுவார் அங்கு அந்த அம்மன் கலை இங்கு வீரபத்திரர் கலை அங்கு காளி இங்கு துர்க்கை அங்கு அந்தோனி என்று இப்படி பலரும் சொல்லினும் நான் நினைப்பது திருநாவுக்கரசர் ''ஏன் அப்படி சென்று நாம் சிறு தெய்வம் சேர்வோம் அல்லோம்'' எனக் கூறுவான்? சிவன் அருளை நாடிப் பெறமுடியா விட்டாலும் ஞான சம்பந்தப் பெருமான் திருவடி நமக்கு காப்பாகுமே என நினைப்பதுண்டு.

ஆதலினாலே துர்க்கை மாதா அநுமான் காளி அந்தோனி என்ற இந்த வகையான தெய்வங்கள் வணங்கு வோருடைய அந்த அந்த நேர ஆறுதலைத் தருமாயினும் பின்னால் அதே தெய்வ உபாசனையால் தீங்கும் பெறவேண்டி நேரிடும். இதை நீங்கள் சிந்தித்து தெளியுங்கள். இதை உங்கள் நன்மை பொருட்டே நாம் தெரிவிக்கின்றேன்.

ஆதலினாலே எங்கள் பிரான் ஞானசப்பந்தன். யோகசுவாமி இப்பெருமக்கள் யாரும் மக்களிடத்துப் பலப்பல தடுமாற்றங்களை [illegible]குகின்ற அறியாமையால் துன்பப்பட்டுப்போகாது நல்வழிகாட்டிடவந்த உத்தமர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமணமும் புத்தமும் மக்களிடத்து வஞ்சனை செயல்களைப் பெருக்கி மறைமுகமாக கொலை களவு முதலியவற்றையும் ஊக்குவித்து நின்றபடியால் அதன் நிலையை உணர்ந்து சிவன் அருளால் இங்கு அவதரித்து வந்து ஞானப் பால் உண்டு அருள் கலந்த தமிழ் மூலம் சமணர் புத்தர் வழி பழி பெருக்கும் எனக் காண்பித்து அதில் சிக்காதீர் என மொழிந்து எம்மை உய்ய வைத்தார் திருஞானசம்பந்தர்,

இந்த வகையில் நாம் ஒன்றைச் சிந்திக்க வேண்டும். சமணரும் தமிழ் மொழிக்கு காவியம் செய்தனர், அப்படி என்றால் சமணரை தமிழுக்கு தொண்டு செய்தார் என சொல்லலாமா? அது தான் முடியாத நிலையில் உளது, ஏன் எனில் சமணரது கொள்கை வஞ்சனை உடன் கலந்தது; அத்தமிழ் ஓதுவார்க்கு பயில்வாரக்கு தீங்கு விளைவிக்கும்.

அதனாலே தான் சம்பந்தர் தன்னை தமிழன். தமிழ் சுற்றமும் முற்றும் தமிழ் ஆயினான் எனக் கூறி கொச்சைத் தமிழன் அல்ல செந்தமிழின் சம்பந்தன்; தன்தமிழை ஓதுவார் கேட்பார் யாவரும் உய்வர்; தனது தமிழை ஓதுவார்க்கு குற்றம் முழுவதும் இல்லாமல் போகும் குணங்களுடைய நன்மைகள் வந்து கூடிடும் என்கின்றார்.

இவருடைய தமிழை படித்திட சுவைக்க எல்லாராலும் முடியாது. தவமுடையார்க்கே அது முடியும் என்பதை நாம் எடுத்து கூறுகின்றோம். உலக போகங்களில் மிகவும் அழுந்திக் கொள்வார்க்கு இது எந் நிலையிலும் எட்டாது!

அடுத்து திருஞான சம்பந்தரது பதிகங்களை கட்டாய மூலம் ஓதப் பண்ணல் மிகு பாதகம். அச் செயல் திருஞான சம்பந்தரை கீழ் இறக்குவதாகும். ஆறுமுக நாவலர் இந்த ஒரு நிலையில் மிக மிக பேதமையான செயலை உருவாக்கி விட்டார். இந்த ஒரு நிலையில் இராமலிங்க சுவாமிகளுடன் பகைத்து வழக்காடி திருநீற்று நெறியில் பெரும் துரோகம் செய்து விட்டார், நான் இதனை இங்கு ஏதும் கபட மின்றி தெரிவிக்கிறேன். ஐயோ இவ்வுலகில் எனது ஐயனை சிவனை குருமணியை எங்குமாகி இருப்பவனை யாரும் பாடலாம், அது எல்லாம் திருவருள்வசம். எம்பெருமானைப் பாட முற்படுவதே சிவனது அருளால் அன்றி வேறு நிலையில் அது கைகூடாது என்பது பெரியோர் துணிபு. ஆதலில் ஏம்பிரானை இராமலிங்கசுவாமிகள் பாட அதனை அவர் அடியார் அருட்பாடல் என்று சொல்ல அதனை மருட்பா என்று நாம் சொல்லல் பெரும் தவறு. இராமலிங்க சுவாமிகள் திருவாசகத்தை தேவாரப் பதிகத்தை சுவைத்து இன்புற்று எவ்வளவோ பாடல் மொழிகின்றார். அப் பதிகங்களை அவர் சுவைத்து இன்புற்றுப் பாடிய பாடல்களை நாம் மருட்பா எனச் சொல்வது பேதமை!

நாவலர் திருமுறை அன்றி சிவாலயங்களில் வேறு பேர் பாடிய பாடல் ஓதக் கூடாது என மொழிந்தது திருமுறை மேல் அவர் கொண்ட நம்பிக்கையை வெளிப்படுத்த எனினும் திருமுறையைப் போற்றிடும் ஓர் அடியவராம் இராமலிங்க சுவாமிகளை இகழ வேண்டிய ஓர்குற்றத்திற்கு பெரும்தீய செயலிற்கு தாம் ஆளாகிவிட்டார்,

இராமலிங்கசுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை நாம் இங்கு குறித்திட முடியாது. அவர் வாயால் வந்த பாடலின் அருட்சிறப்பை நினைக்க வேண்டும். ஏனெனில் அருணகிரியார் பட்டினத்தார் திரு நீலகண்ட நாயனார் அதிபத்தர் கண்ணப்பர் முதலியோரிடமும் சைவ நெறிக்கு ஒவ்வாதன இருந்திருக்கின்றன, ஆனால் இவர்களைப் பெரியோர் போற்றுகின்றனர்.

திருத்தொண்டத் தொகையில் எம்பிரான் சுந்தரர் எம்பிரான் சம்பந்தரை எம்பிரான் சம்பந்தன் அடியார்க்கும் அடியேன் எனப் போற்றுகிறார். சம்பந்தர்க்கு மட்டுமல்ல சம்பந்தர் அடியார்க்கும் அடியேன் என்ற போது அன்று சம்பந்தருடன் தொண்டு புரிந்த அடியாரை மட்டு மல்ல என்றும் சம்பந்தரைப் பாடிப் போற்றும் யாவர்க்கும் அடியேன் என நாம் கொள்ள வேண்டும். ஒருவருடை நோக்கம் சிவன் அருள் பெறற்கே என எண்ணிப் பாடிடும் பொழுது அதை நாம் புறக்கணித்தல் பாதகம்,

சம்பந்தரோ அல்லது அப்பரோ அல்லது சுந்தரரோ மாணிக்க வாசகரோ எவராகுதல் தமது பாடல் மட்டும் தான் ஓதப்படல் வேண்டும் என வலி உறுத்துச் சொல்லவில்லை' இதை எல்லாம் உணராமல் நாவலர் பெருமான் என நாவலரை சில பேதையர் சொல்லி போற்றி பெரும் பழுதான விளைவை எம் சைவ நெறியில் வருவித்துக் கொண்டனர்.

திரு நீற்றின் ஒருமைப் பாடான நெறியை பங்கப்படுத்தி நால்வர் பதிகங்களை போற்றுதலில் பலன் ஏதும் இல்லை, நால்வர் பதிகங்களின் நயத்தை சிறப்பை உலகறியச் செய்வதே மேலான தொண்டு, நம்மிடத்து சில பத்திரிகைகள் உள திருநாவுக்கரசரது உளவாரப் படையை சவர அலகிற்கு ஒப்பிட்டு தலையங்கம் வரைந்துள்ளன, இத்தகைய பத்திரிகைகள் ஆறுமுகநாவலருக்கு சிறப்பிதழ் வெளியிடலாம். இது முழுக்க முழுக்க மீனும் கள்ளும் குடித்து மகிழ்ந்து விட்டு பின்னேரம் திருநீற்றுக்குறியுடன் வில்இசையில் பொப் இசையில் பிரசங்கம் பாட்டுக்கச்சேரி கோவிலில் வைப்பது போலாகும்.

ஆதலினாலே எம்பிரான் சம்பந்தருடைய தமிழை உணர தவநெறியின் சீலம் வேண்டும், அதை வளர்ப்பதென்றால் தவ நெறியிலாத வெறும் பிரசாரத்தால் அல்லது விழாவால் அல்லது முட்டாள்களான திருக்கேதீச்சர திருப்பணிச்சபையார் போன்று சட்டம் இயற்றுதலால் விளங்க வைக்க இயலாது.

இங்கு தரப்பட்ட தேவாரம் திருத்துருத்தி எனும் தலத்து அருள் செயப்பட்டது, இங்கு சுவாமி சொன்னவாறு அறிவர், இத்தலத்துத்தான் சுந்தரர்க்கு உற்ற உடற் பிணி நீக்கப்பட்டது, இப்பதிகத்தை ஓதி தமிழின் சுவையையும் சைவத்தின் புனித புண்ணிய விளைவையும் உணர்ந்து நன்கு வாழுங்கள்.

திருச்சிற்றம்பலம்

**வரைத்தலைப் பசும் பொனோ டருங்கலன்கள் உந்திவந்**
**திரைத்தலைச் சுமந்துகொண் டெறிந்திலங்கு காவிரிக்**
**கரைத்தலைத் துருத்திபுக் கிருப்பதே கருத்தினாய்**
**உரைத்தலைப் பொலிந்துனக் குணர்த்துமாறு வல்லமே.**

மலையின் உச்சி இடத்து விளங்கிய பசிய பொன்னுடன் நல்ல மணிகள் இரத்தினங்களையும் எடுத்தேந்தி தனது திரையின் தலை மீது சுமந்து கொண்டு வந்து கரை மீது எறிய அவை ஒளியுடன் பிரகாசித்தலாய் இலங்கிடும் காவிரியின் கரையில் தலையாய இடமாக விளங்கிடும் திருத்துருத்தி என்னும் கோயில் உள்ளாக புகுந்து இருப்பதே உனது கருத்தாகக் கொண்டாய் எம்பெருமானே சிவனே! அவ்வாறாக நீ விரும்பியதைச் செய்தலின் நாம் உமக்கு ஏதும் எடுத்துரைத்துப் பாடி மேலோங்கி பொலிந்து உனக்கு உணர்த்தும் வகையில் நாம் வல்லமை உடையோமோ?

திருத்துருத்தியில் நீ இருக்கின்றாய் அவ்வாறு அது உன் கருத்து. நீ சொன்னவாறு அறிவாய் எனக் கூறப்பட்டாலும் உனக்கு நாம் சொல்ல அது தலையான தமிழ் பொலிந்து சொல்ல அல்லது உணர்த்திட நாம் வல்லமை உடையோமோ என்ற வகை கூறிடுகின்றார்: காணப்படாததனை கண்டு சொல்ல என்ன சாமர்த்தியம் அல்லது வல்லமை உண்டு என்றபடி:

**அடுத்தடுத் தகத்தியோடு வன்னிகொன்றை கூவிளம்**
**தொடுத்துடன் சடைப்பெய்தாய் துருத்தியாயொர் காலனைக்**
**கடுத்தடிப் புறத்தினா லிறத்துதைத்த காரணம்**
**எடுத்தெடுத் துரைக்குமாறு வல்லமாகின் நல்லமே.**

அடுத்து அடுத்து ஒன்றன்பின்ஒன்றாக அகத்தி மலருடன் வன்னி கொன்றைப் பூ வில்வம் இவை யாவும் மாலையாகத் தொடுத்து சடைமீது அணிந்தாய்; திருத்துருத்திஎன்னும் கோயிலில் இருப்பவனே நீ ஒரு இயமனை திருவடிப் புறங்காலினால் நிறைவாக உதைத்தருளிய காரணத்தை இவ்வுலகில் எடுத்து உரைத்திட நாம் வல்லமை உடையோமாகில் அவ்வளவும் நல்லது.

காலன் (இயமன்) என்பவன் கொடியவன். அவனை காலால் உதைத்தருளிய வண்ணங்கள் சிறப்புக்கள் சொல்லவல்லமை உடையோமாகில் அவை மிக மிக நன்றாகும் என்கின்றார்: அதை யாரும் தினம் தினம் சொல்லினும் நன்மை பெருகும் என்றவாறு. 2

**கங்குல்கொண்ட திங்களோடு கங்கைதங்கு செஞ்சடைச்**
**சங்கிலங்கு வெண்குழை சரிந்திலங்கு காதினாய்**
**பொங்கிலங்கு பூணநூல் உருத்திரா துருத்திபுக்**
**கெங்குநின் இடங்களா அடங்கிவாழ்வ தென்கொலோ.**

இரவினை தனது ஆட்சியாகக் கொண்ட இளம் பிறை யுடன் கங்கை ஆறும் தங்குகின்ற செஞ்சடையும் சங்கின் ஒளி விளங்கும் வெண்தோடு சரிந்து இலங்கும் காதினை உடையவனே: பொங்கி விளங்கும் பூநூல் அணிந்த உருத்திரமூர்த்தியே: திருத்துருத்தி எனும் இக் கோயிலுள் உட்புகுந்து கொண்டதுமன்றி எங்கும் நினது இடங்களாக வைத்துக் கொண்டு ஆங்காங்கு நீ தங்கி வாழ்கின்றது என்ன காரணமோ?

திருத்துருத்தியில் உட்புகுந்து இருக்கிறாய் என் ஐயனே பூநூல் அணிந்த உருத்திரமூர்த்தியே இது வன்றி எங்கும் நினது இடங்களாக ஆங்காங்கு தங்கி வாழ்வது என்ன காரணம்? எங்கும் இருப்பாய் இங்கும் இருப்பாய் என்ன காரணம் என்கின்றார். உனக்கு எவ்வாறு நாம் பாடுவது. நமக்கு அந்த வல்லமையும் உண்டோ எனக் கேட்பவர் காலனை உதைத்ததையை அடிக்கடி சொல்வதே நல்லது எனக் கூறிவிட்டு இப்பால் எங்கும் இருப்பாய் இங்கும் இருப்பது என்ன காரணம் எனக்கேட்பது பத்திமையின் பரிவால்எழும் 3

## நமக்கு ஓர் பிறவி வாய்த்தது

நமக்கு ஒரு பிறவி வாய்த்தது ஞானசம்பந்தனுடைய தமிழை ஓதி உணர்ந்து சுவைக்க என்றதால் எனது இப்பிறவியை நான் வணங்கலாம் என்றே நினைக்கிறேன், உண்மையில் என் வாழ்வில் பெறக் கூடிய எல்லாச் சுகங்களையும் இழந்த ஒருவனாக நான் வாழ்ந்தாலும் இந்த ஒரு பேற்றை நமக்கு திருவருள் தந்துள்ளதே என்று நினைக்கும் போது எனை அறியாத ஓர் மலர்ச்சி என்னிடம் உதயமாகிறது.

முன்புள்ள மனிதனிலும் இன்றுள்ள மனிதர் உலகில் பெறக் கூடிய போக சுகங்கள் அளப்பிலவாகும், கல்வி உத்தியோகம் உடை வானொலி இசை தூர தேசப்பிரயாணம் உல்லாசம் மக்கட் சிறப்பு விடு வாகனம் எல்லாவற்றிலும் இனி வேண்டாம் என்ற அளவிற்கு போகம் விளையும் பூமியாக இன்று இந்த பூமி அமைந்துள்ளது. போக பூமி சொர்க்க பூமி சுகபூமி இன்பபூமி என்றெல்லாம் நூல்களில் படித்தோம், அவை அங்கு வேறில்லை இங்கு தான் என்ற சிறப்பிற்கு விஞ்ஞானத்தில் வளரும் இந்த உலகம் சிறப்புற்று இருக்கிறது.

இன்றைய இப் பூமியில் காசு உள்ளவனாக வருவாய் உடையவனாக ஒருவன் வந்து விட்டால் அப்பாடா அவனுக்கு இப் போகமெல்லாம் இயல்பில் சேருகின்றன. நாளும் நாளும் எல்லா மக்களும் இவை பெற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்திஞலோர் காணியில் விருத்தியில்லை தொண்டர்தம்**
**அருத்தியால்தம் அல்லல்சொல்லி ஐயமேற்ப தன்றியும்**
**ஒருத்திபால் யொருத்திவைத் துடம்புவிட்டி யோகியாய்**
**இருத்திநீ துருத்திபுக் கிதென்னமாயம் என்பதே.**

உம் நிலையை உணர்ந்தால் உமது கருத்தில் உமக்கு ஒரு துண்டு நிலம் இல்லை. இருந்தாலும் அதில் பாடுபட்டு பயிர் நட்டு விருத்தி இல்லைப் போலும். அதஞலே உமது தொண்டர் உமக்காக எல்லாம் நீக்கி விட்டு நிற்பார் தமது துன்பம் சொல்லி பிச்சை ஏற்பார்; அவர் போல நீரும் அல்லல் சொல்லி பிச்சை ஏற்பதன்றியும் ஒரு பெண்ணை ஒரு புறத்துள் வைத்து இன்னுமொரு பெண்ணை தலையில் வைத்து இவ் வகையால் இரு பெண் வைத்தும் உமது உடம்பின் பற்று விட்டு நீ யோகியாய் இருப்பாய். அவ்வாருயின் நீ இங்கு வந்த காரணம் என்ன மாயம் என்பதுதான் நமது சந்தேகமாகின்றது.

ஓர் உடம்பு இருவராகி பெண் ஒரு பாகமாகி போதாது தலையிலும் பின் ஒருத்தியை வைத்தும் உன் உடம்பின் பற்றை விடுத்து யோகியாஞய். பெண்உடன் இன்புறுதற்கு உற்ற உடம்பாயும் நீ யோகியாஞல் பின் இதுவன்றி துருத்தி என்னும் இக் கோயிலில் இருக்கின்ருய். இது எங்கட்கு விளங்கவில்லை இது என்ன மாயம் இவ்வாறெல்லாம் செய்வாய் என்பதே எமது கேள்வி என்கின்ருர். 4

**துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி**
**மறக்குமா றிலாதஎன்னை மையல்செய்திம் மண்ணின்மேல்**
**பிறக்குமாறு காட்டிஞய் பிணிப்படும் உடம்புவிட்டு**
**இறக்குமாறு காட்டிஞய்க் கிழுக்குகின்ற தென்னையே.**

எல்லாப் பற்றையும் நீக்கிய வகை இவ்வாறு என்றது சொல்லப்படமாட்டாய். திருத்துருத்தியில் இருந்த என் கடவுளே உமது திவ்விய திருவடிகளை என்னென்றும் மறக்கும் வகை அறியாது இருந்த என்னை மயக்கம் செய்து இப் பூமி இடத்தாக பிறக்கும்படி வகை காட்டிஞய். பலவற்றிலும் பலவற்றிலும் பற்றுக் கொள்ளும் இந்த உடம்பை விட்டு இறக்கும் படியும் காட்டிஞய். இப்படியாக உன் வல்லமை இருக்குமாகில் உன்ஞல் செய்யமுடியாதது அல்லிது இழுக்காகிய கருமம் ஏதாகிலும் உண்டோ

யாவும் நினது செயல் அன்றி வேறில்லை என்றவாறு. இப்பதிகத்தில் எம்பிரான் ஞானசம்பந்தர் தமது முற்பிறவியின் நிலை உணர்த்துகின்ருர். சிவனது குடும்பத்தில் ஒருவராவர் இவர் என்பது குறிப்பால் ''திருந்தடி மறக்குமாறு இலாத என்னை மையல் செய்து இப் பூமியின் இடத்து பிறக்கும்படி வழிகாட்டிஞய்'' எனக் கூறுகின்ருர். மறக்குமாறு இல்லால் நிலையில் இவர் கடவுளின் அருள் பற்றிப் கைலையில் இருந்தவராதல் வேண்டும். இதனை சேக்கிழார் ''தம் மேலைச் சார்பு உணர்ந்தோ சாரும் பிள்ளைமை தாஞே'' என்று கூறியிருக்கின்ருர். பெரிய புராணத்து ''தம்மேலைச் சார்பு என்றது முன்பு பல கால் தவம் புரிந்து முனிவஞகி சிவனுடன் ஐக்கியப்பட்ட நிலையாகும். அடுத்து ''சாரும் பிள்ளைமை'' என்றது இவர் முருகக் கடவுளாகும் என்றதாக இருக்கலாம்.

இத்தகைய அருட்செறிவு உலகில் ஏனையோர்க்கு எய்தாது. சம்பந்தர் வருகை சைவ மக்களை தலைதூக்கி வைத்திடவாகும். இதை யார்க்கு இலகுவில் விளங்கும்! அங்கு நின்று தந்த தெய்வங்களைப் பற்றி நாம் மேல் போகலாம் அன்றி இங்குள்ள மனிதரை செத்துப் பிறக்கின்ருரை தேவு என்று சொல்வது நீதியாகுமா?

உடம்பு பிணி உடையது என்பதை நோய் மட்டுமல்லாது வேறு வேறு பற்றுக்களையும் குறிப்பதாயது.

தமிழின் உயர்வு உணர்த்த சிவன் செய்த அருளாவது திருஞானசம்பந்தர் வருகை. இது அவரது வித்துவச் சேட்டை அல்ல. முழுவதும் திருவருள்.

ஒருவர் ஒரு பெண்ணைக் கண்டவுடன் அவள் பால் சிந்தை மயங்குவது; விருத்தி உடைய காணிகளைக் கண்டவுடன் மனம் ஆசைப்பட்டு மயங்குவது; வாகனம் முதல் பல உல்லாசப் பொருளைக் கண்டு மனம் மயங்குவது; பொன் முதலிய சொத்துக்களைக் கண்டு மயங்குவது விபரீதமான சிகை அலங்காரம் உடை அலங்காரம் இவை கண்டு மயங்குவது எல்லாம் பிணி என்ற வகையே கொளப்படும். ஆதலால் பிணி உடைய உடம்பு என்ருர். 5

**வெயிற்கெதிர்ந் திடங்கொடா தகங்குளிர்ந்த பைம்பொழில்**
**துயிற்கெதிர்ந்த புள்ளினங்கள் மல்குதண் துருத்தியாய்**
**மயிற்கெதிர்ந் தணங்குசாயல் மாதொர் பாகமாகமூ**
**எயிற்கெதிர்ந் தொரம்பிஞல் எரித்தவில்லி யல்லையே.**

சூரிய தேவனது வெயிலை எதிர்த்து அது கீழ் வருவதற்கு இடம் கொடாது தனது உள்ளம் குளிர்வது போன்று பசிய இலை எங்கும் பரப்பி வளர்த்தோங்கிய சோலைகளில் துயில் நீக்கி எதிர்த்து கூச்சலிடும் பறவை இனங்கள் விளங்கிடும் சிறந்த குளிர்மையுடைய திருத்துருத்தி என்னும் பதியில் கோயில் கொண்டு இருப்பவனே! மயிலின் சாயல் திறமாகாது அதற்கு எதிர்த்து தெய்வத்தன்மை விளங்கிடும் சாயல் உடைய உமைஅம்மையாரை ஓர் பாகமாக உடையவராகியும் இரும்பு பொன் வெள்ளி என்னும் மும் மதில்களாலும் ஆக்கப்பட்ட முப்புரத்து இருந்த அசுரர்களை பாதுகாக்க வேண்டி அசுரர்களை தீய வழிக்கு திருப்பிடுதற்கு காரணமாக இருந்த அந்த மூன்று மதில்களையும் எதிர்த்து சென்று ஓர் அம்பிஞல் முப்புரங்களையும் எரித்த வில்லை எந்திய கடவுள் நீ அல்லவோ.

வெயிற் கெதிர்ந்து— என்றது சூரியனுடைய வெயில் கீழ்விழாதபடி நிழல் பரப்பி தடுத்தது என்ற வகையாகும். அகம் குளிர்ந்ததென்பது— தண்ணீர் உணவிஞல் நல்லோர் இடைவாழ்தலால் உள்ளம் குளிரும் சோலை என்றவாறு. நல்லோர் மத்தியில் மரங்களும் குளிர் தூங்கும் என்றவாறு. துயிற்கெதிர்ந்த புள்ளினம் என்றது பறவைகள் அதிகாலையில் கூக்குரலிட்டு துயிலை நீக்குவன. தாமே அதிகம் துயில் கொள்வன அன்று: கோழி சாமம் சாமமாகக் கூவுதல் இதற்கு சான்று: மயிற்கெதிர்ந்த சாயல் என்பது மயில் எப்பொழுதும் பெண்களின் நற்குணசாயலுக்கு ஒப்பிடப்படுவது. இனிய நடை தனித்தபோக்கு இவையாவும் மயிலின் குணமாகும். ஆகவே அதனையும் மிஞ்சிய சாயலுடையார் உமை அம்மை என்றவாறு. 6

**கணிச்சியம்ப டைச்செல்வா கழிந்தவர்க் கொழிந்தசீர்**
**துணிச்சிரக் கிரந்தையாய் கரந்தையாய் துருத்தியாய்**
**அணிப்படுந் தனிப்பிறைப் பனிக்கதிர்க் கவாவுநல்**
**மணிப்படும்பை நாகம்நீ மகிழ்ந்த அண்ணல் அல்லையே**

மழுவாயுதத்தை திருக்கரத்தில் ஏந்திய செல்வனே இறந்தாரின் சீர் ஒழிந்ததுண்டான மண்டை ஓட்டை மாலையாக அணிந்தவனே, கொண்றை மாலை சூடியவனே; திருத்துருத்தியில் அமர்ந்தவனே; அழகு பொழியும் தனியான இளம்பிறையும் அதன் குளிர்க் கிரணங்களுக்கு விரும்புகின்ற இரத்தின முடியுடைய நாகபாம்பையும் நீ சடைமீது தரித்து மகிழ்ந்த கடவுள் அல்லவோ!

கழிந்தவர்க் ஒழிந்த சீர் துணிச்சிரம் என்றது — பற்று எல்லாம் அற்று நீங்கிய உடல்களின் சிரங்களை மாலையாக ஏந்திய வரலாற்றைக் குறிப்பது. இறந்தாரின் மண்டை ஓடு சிவத்தின் மாலை ஆகிறது என்றவாறு.

**சுடப்பொடிந் துடம்பிழந் தநங்கஞய மன்மதன்**
**இடர்ப்படக் கடந்திடந் துருத்தியாக எண்ணிஞய்**
**கடற்படை யுடையஅக் கடல் இலங்கை மன்னனை**
**அடற்பட அடுக்கலில் அடர்த்த அண்ணல் அல்லையே.**

நெற்றிக் கண்ஞல் சுட்டிட பொடிந்து தனது உடம்பு இழந்த ஒருவருக்கும் தென்படாது உருவிலியாய மன்மதன் இடர்ப்பட்டு கிடந்திட அவனை எரித்த அற்புதம் உடையவனே அவ்வாருய நீ திருத்துருத்தியே உனது இடமாக எண்ணிக் கொண்டாய். பெரும் கடற்படையுடைய இராவணன் கடல்சூழ்ந்த இலங்கை அரசனை கைலைமலையில் வைத்து உன்காலில் கீழ் அவனை அடக்கி அவன் கொடுமை எல்லாம் நீக்கிய கடவுள் நீ அல்லவோ? (பலரையும் துயரப்படுத்தும் மன்மதனை எரித்தவாறும் கடலில் இராக்கதரை நீரில் பெரும் படையாக வைத்திருந்த இலங்கை அரசன் இராவணனை அவன் செய்த கொடுமைக்கு ஏத்த அளவாக காலின் கீழ் வைத்து அடக்கிய அற்புதம் புலப்படுகிறது.) 8

வே முயல்கின்றனர் முயன்ற வண்ணம் இருக்கின்றனர் எடுத்ததற் கெல்லாம் நேரமில்லை எனக்கூறி வருவாய் தேடிடும் வழியில் மக்கள் உழல் கின்றனர்.

இன்று மக்கள் மனதில் என் நேரமும் எழுகின்ற பிரச்சனை காசு கலியாணம் கல்விடு கார் என்ற வகையாகவே உளது, தந்தை தாயரைக் கொலை செய்தால் கூட பாவமான காரியம் என என்ஞதபடி மனித குலம் இன்று இவற்றின் மேல் மோகத்தைப் பெருக்கிக் கொண்டது. பெரியோர் அறிவாளி நல்லவன் அடக்க முடையவர் என்றவர் இந்தபோகம் பெற மாட்டாதார் பேயர் கூட்ட மாகக் கருதப்படுகின்றது.

தனது தந்தை நீதி உடையவராக இவற்றின் விருப்புக் குறைவாக உடையவராக இருப்பின் பிள்ளைகள் தந்தை தாயரை அவமதித்து புறக்கணித்து அடித்துக் கலைக்கவும் முனைகின்றனர்.

உண்மை பேசி வாழ்வார் கபடமின்றி வாழ்வார் நீதியாக வாழ்வார் பைத்திய காரராகவும் இதை இல்லாது சந்தர்ப்பத்தை பயன் படுத்தி பணம் பெற்ருேர் பெரியவராகவும் வந்துள்ளனர். இது உண்மையான நிலை, ஆதலின் உலக மக்களின் இந்த அவா நிலைக்கு பெரியோரும் இரையாக வேண்டும்.

இந்த போகங்கள் மேலுள்ள அவாவால் தப்பிப் பிழைத்தால் ஒழிய ஒருவர்க்கு தெய்வம் என்னும் சித்தம் வராது, இந்த போகங்கள் மேலாக உள்ள கருத்தை- பித்த உலகரின் பெரும் துறைப் பரப்பு; என்று இந்த பூமியை என்ன அழகாக மாணிக்க வாசகர் வாணிக்கின்ருர். பித்த உலகரின் பெரும் துறைப் பரப்பில் மனிதன் கொள்ளும் அவா மதம் பிடித்த யானை போல் இருக்கிறது என மேலும் கூறுகின்ருர். இதஞலே இந்த அவாவிலே தப்பிப் பிழைத்தல் மிக் மிகக்கடினம்.

தெய்வம் சிவனைப் பாட வந்த சம்பந்தரை அவர்பாடிய பாடலை பாடி இன்புறற்கு உலகில் போகங்களில் அவா நீங்கல் வேண்டும், சுந்தரர் பெருமானும் உரைப்பார் உரை உகந்து உள்கவல்லார் தங்கள் உச்சியாய் என எம் பெருமானைப் பாடிடும் போது சிவனருள் பெரியோர் அவர்களின் பாடலை உகந்து உணர்வார்க்கு உண்டு என்பது கூறப்படுகிறது, எனவே இத்தகைய ஓர் நிலையை நான் பெறலுமன்றி ஏனையோரையும் இது பற்றிக் களங்கமின்றி நினைவு படுத்திட வந்த எம் பிறவியை வாய்த்த ஒரு பிறவி என மொழிதல் சாலவும் பொருந்தும்,

## எப்படிச் சுகம் என கேட்டார் யோகசுவாமி

ஒரு நாள் யோகசுவாமியைக் கண்டேன். உடன் அவர் என்னை நோக்கி எப்படிச் சுகம் எனக்கேட்டார். நான் அவரை நோக்கி சுவாமி சுகமாய் இருக்கின்றேன் என பதில் கூறினேன். சுவாமி திரும்ப என்னை நோக்கி நல்லாய் நடந்தால் என்றும் சுகமாக இருக்கலாம். நடத்தை தான் ஒருவனது ஆரேக்கியத்திற்கு காரணம். நல்ல நடத்தை பிணியில் நின்றும் நம்மை பாதுகாக்கும். தீய நடத்தை சீககிரம் நோயைக் கொண்டு வரும் என்பதைக் குறிப்பால் உணர்த்திச் சென்ருர் சுவாமி என இவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களங்குளிர்ந் திலங்குபோது காதலானும் மாலுமாய்
வளங்கிளம்பொ னங்கழல் வணங்கிவந்து காண்கிலார்
துளங்கிளம்பி றைச்செனித் துருத்தியாய் திருந்தடி
உளங்குளிர்ந்த போதெலாம் உகந்துகந் துரைப்பனே.

தண்டு குளிர்ந்து நன்கு விரிந்து விளங்குகின்ற தாமரை மலரில் இருக்கும் பிரமதேவனும், திருமாலுமாக என்றும் வளம் தோன்றும் இளமை மிகுந்த பொன் போலும் உமது திருவடிகளை அன்புடன் வணங்கி வந்து காணமல் போயினார்கள். தக்கன் சாபத்தால் உள்ளம் நடுநடுங்கிய இளம்பிறையை சென்னிமீது தரித்துக் கொண்டவனே, திருத்துருத்தி அமர்ந்த செல்வனே. தேவரீரது திவ்விய திருவடிகளை என் உள்ளம் குளிர்ந்தநேரத்தில் எல்லாம் உவந்து உவந்து பாடுவேனே.

தண்டு குளிர்ந்தால் தாமரைப் பூ நன்கு விரியும் என்றதால் களங் குளிர்ந்து இலங்குபோது என்றவாறு வளங் கிழம் பொலங் கழல் என்றது எல்லா நலனும் என்றும் தோன்றும்படி நின்ற இளமை உடைய திருப்பாதம். 9

புத்தர்தத் துவமிலாச் சமணுரைத்த பொய்தனை
உத்தம மெனக்கொளா துகந்தெழுந்து வண்டினம்
துத்தநின்று பண்செயுஞ் சூழ்பொழில் துருத்தியெம்
பித்தர்பித்த னைத்தொழப் பிறப்பறுத்தல் பெற்றியே

புத்தர் நற்தத்துவ உணர்ச்சி இலாத சமணர்கள் சொல்லிய பொய்யினை அது உத்தமமானது எனக் கொள்ளாது உறுதியுடன் உள்ளம் மகிழ்ந்து எழுந்து வண்டு சூழ நின்று பண்பாடும் சோலை சூழ்ந்த திருத்துருத்தியில் இருந்த எம்பித்தர்களின் பித்தனை பெருமானை தொழுதிட உம்பிறப்பறுத்தல் பயனாகும்;

சமணர்க்கு நற்தத்துவ உணர்ச்சி இல்லை என்றவாறு புத்தர்களுக்கும் அவ்வாறே தான்; அவர்கள் உண்மைகாணாது மனசங்கற்பத்தினால் மட்டும் ஏதோ உண்மையைக் கண்டது போல சொல்வார்கள்; நிர்வாணம் துறவு இந்த நிலை பற்றி இவர்கள் சொல்வார்களே ஒழிய மேற்கொண்டு இவரால் யாதும் காண முடிவதில்லை; ஆதலினாலே காணாததைக் அல்லது அப்படி இல்லாததை கண்டேன் எனச் சொல்வதால் அவர் மொழி பொய்யாயது; ஆதலினால் உலகமக்களே அதை நம்பவேண்டாமென்று ஞானசம்பந்தர் சொல்கிறார்; உண்மையான சிவனடியார்கள் பைத்தியகாரர் போன்றே இருப்பார்கள். ஆதலினால் பித்தர் பித்தன் எனப்பட்டது. 10

கற்றுமுற்றி னார்தொழுங் கழுமலத் தருந்தமிழ்
சுற்றுமுற்று மாயினான் அவன்பகர்ந்த சொற்களால்
பெற்றமொன் றுயர்த்தவன் பெருந்துருத்தி பேணவே
குற்றமுற்று மின்மையிற் குணங்கள் வந்து கூடுமே.

கற்று அறிவு முதிர்ந்த பெரியோர் தொழுகின்ற சீர்காழியில் அரிய தமிழ் தனது சுற்றமுமாகி தானே தமிழாகி இருக்கும் ஞானசம்பந்தன் சொல்லிய சொற்களால் இடபமீது எழுந்தருளிய எம்பெருமானின் திருப்பெரும் துருத்தித்தலத்தை போற்றிப் பேணிக் கொள்ள குற்றம் முழுவதும் இல்லாமல் போவதால் நல்ல குணங்கள் வந்து கூடிக் கொள்ளும்.

தன்னையே தமிழின் வடிவம் என்கின்றார் ஞானசம்பந்தர்: தனது சுற்றமும் தமிழ் தானும் தமிழ் என்றவாறு தான் ஓர் அந்தணராய் இருந்தும் தன்னை தமிழ் சுற்றுமுற்றும் ஆயினன் என சொல்லும் அற்புதம் காண்க. இதை இன்று எந்த அந்தணர் விளங்கிக் கொள்வார். 11

வாறு கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த நண்பரொருவர் என்னிடம் தெரிவித்தார்,

இந்தக் கருத்தை உணர்ந்தால் தனி மனிதன் அளவில் அன்றி நாட்டின் அளவிலும்ஆலயங்களில் சைவஇல்லங்களில் நல்நடத்தை நன்று என்றோம். இதைத்தான் கள் உண்பார் நஞ்சுண்பார் என வள்ளுவர் கூறியுள்ளார்.

இன்று கள்ளிலும் நஞ்சாகின்றது வானொலிப் பெட்டி என்பதை நாம் குறிப்பிடுகின்றோம். வானொலிப் பெட்டியை கிடைத்தற் கரிய பெரும் பொருளாக மக்கள் கருதி அதை அதிகாலை இருந்து இரவு பதினொரு மணி வரையிலும் தம் இல்லங்களில் பாடும் படி செய்கிறார்கள். அதன் மூலமாக வெளிப்படும் பாடல்களை சிறப்பாக சினிமாப் பாடல்கள் ஒருவனுடைய வாழ்வில் தீயன வருவிக்குமே அன்றி நன்மை விளைவியாது என்பதை உணருங்கள்.

கள் உண்ட போது உற்சாகம் தரப்படும், அதே போல் வானொலிப் பெட்டி சினிமாப் பாடல் முதலியன பாடிடும் பொழுது மனதிற்கு மலர்ச்சி போல இருப்பினும் பின்னே அதே மலர்ச்சி துன்பம் தரும். இது எப்படி எனில் கள் உண்ட போது உடம்பில் ஏற்படும் உற்சாகம் பின்னர் சோர்வாகி விடும், இந்தச் சோர்வும் நோயாகி பின்னர் தீங்காகி விடுகின்றது. இதே போன்று வானொலி கேட்கும் மலர்ச்சியும் தீங்காக விளையும். அருள் நெறியைக் கெடுத்து இருள் வழியை பெருக்கும் வானொலி கேட்பதை தூய உணர்வுடைய சைவன் ஒருபோதும் விரும்பான்.

ஆதலால் நடத்தை நன்றாக உடையவர் என்றும் இசை முதலிய அநுபவிப்புகளிலும் புத்தி சாலித்தனமாக நடத்தல் அவசியம்.

தேவையற்ற இசைகாட்சி அநுபவிப்புகளில் கட்டுப்பாடே பொறி வாயில் அவித்த பொய் தீர்ஒழுக்கம் என கூறப்பட்டு நீடித்த வாழ்வு தரும்

# இறந்தபின்மனிதர்என்னாகின்றனர்எனஇயமன்நாச்சிகேதனிற்குகூறினவை

## கதா உப நிடதம் பகுதி (4)

1, அங்கு ஒரு நகரம் பதினொரு வாய்தலுடன் பிறப்பிலாத ஆத்மாவிற்கு சொந்த மானதாக இருக்கிறது. இந்த ஆத்மா பிறப்புநினைப்பு அகலாத நித்திய உணர்வுடன் இருப்பது, இந்த ஆத்மாவில் லயித்து வழிபடுவோன் ஒருக்காலும் இனித் துயருறான். அவன் அறியாமையால் நீங்கி விடுதலை பெறுவான். அது அப்படியான ஆனந்தபூர்த்தி.

நகரம் என்றது உடம்பைக் குறித்தது. பதினொரு வாய்தல் என்பது காது இரண்டு கண் இரண்டு மூக்குத்துளை இரண்டு வாய் ஒன்று கொம்பூழ் ஒன்று சலவாசல் மலவாசல் இரண்டு உச்சந் தலையில் மண்டை ஓட்டின் கீழ் ஒன்று ஆக பதினொரு வாய்தலாகும், இந்த உடம்பில் ஆத்மா [கடவுள்] இருக்கிறார். அவரை அறிவார் பின்னர் துயருறார் என்றபடி.

2, இந்த ஆத்மாவே ஒளியுடைய ஆகாயத் துற்ற சூரியனாகும். அவரே உள்வெளியின் காற்றாகும். அவரே பூமியில் இருக்கும் நெருப் பாகும். அவரே வீட்டில் வாழும் விருந்தாளி யாகும், அவரே மனிதரில் இருக்கிறார். கடவுளரில் இருக்கிறார். உண்மையில் இருக்கிறார், வானத்தில் இருக்கிறார். அவர் நீரில் தோற்றுகின்றார். பூமியில் தோற்றுகின்றார். யாகங்களில் தோற்று கின்றார். மலையில் தோற்று கின்றார் அவரே உண்மை யாவர். அவரே பெரியவராவர்.

3, அவரே பிராணனை மேலாகச் செல்லச் செய்பவர். அபானனை கீழாகப் போகச் செய்பவர். எல்லாத் தேவரும் வணங்கிட அந்த ஆனந்தமான அழகின் திவ்வியஆத்மா ஒன்றே நடுவனாக அமர்ந்துளது.

4. எப்பொழுது உயிர் உடம்புடன் வாழ்வதாகக் கருதப்பட்டது அதனில் வாழ்வது அதநின்றும் நீக்கப் பட்டால்! பின் என்ன மிகுதியாக உளது? அது அதுவாகிய சிவனே ஆத்மாவே!

5. எந்த மனித வாழ்வின் உண்மையையும் மேல்போகும் பிராணனால் வாழ்வதில்லை அல்லாது கீழ் போகும் அபானனால் வாழ்வதில்லை ஆனால் மனிதன் வாழ்வது இவற்றின் அன்றி வேறான பொருளிலாகும் இந்த ஒரு பொருளில் தான் பிராணனும் அபானனும் தங்கியிருப்பது

6. நாச்சிகேதனே மிகவும் நன்று. இப்பொழுது மிகவும் நன்றான உள்ளே உள்ள பிரமத்தைப் பற்றிச் சொல்கிறேன்: அத்துடன் இறந்த பின் ஆத்மாவிற்கு என்ன நேருகின்ற தென்பதையும் இனிச் சொல்கின்றேன்,

7. இறந்த பின் சில சீவன்கள் உயிர்வாழும் பிராணிகளின் (மனிதர் உட்பட) கருவில் சென்று சேர்வன. சில உயிர் பிராணிகள் அல்லாத வற்றில் சேர்வன. அது அவை அவை செய்து கொண்ட வேலைகளின் தகுதிப் படியும் அவை பெற்றுக் கொண்ட அறிவின் படியும் என்பதாகும்.

8, இந்த ஆத்மா (புருடன்) உடம்பில் உணர்[illegible] இருக்கும் போது; தான் உணரும் கருவிகளான பொறிகள் நித்திரை யாய் இருக்கும் போது; இந்த ஆத்மா கனாநிலையில் தனது ஒவ்வொரு அழகிய கனாக்கானும் உருவங்களை தானே சிருட்டித்துக் கொள்ளும் ஆனால் இந்த சுகதுக்கம் காண்பிக்கும் கனாநிலை சிருட்டிக்கப்படுவதன்றி உண்மையில் ஆன்மா தூயது. இந்த தூய பொருளே பிரமம் எனப்படும், இது மட்டுமே அழிவற்றது, இந்த உலகம் எல்லாம் அத்தூய பொருளிடத்து தங்கியது, அதைத் தாண்டி எந்த உலகமும் மேல் போக முடியாது. இது அதுவான ஆநந்த சொரூபம்.

9. இருமைகாணாத ஒரு தன்மையான நெருப்பு இந்த உலகில் வெவ்வேறாகி எந்த எந்த வகையாக அது எரிகின்றதோ அவ் அவ் வகையாகின்றது, அதே போன்று இருமையிலாத ஆத்மாவும் எல்லாப் பொருளிடத்தாகவும் புகுகின்ற நேரத்து அந்த அந்த வண்ணமாகின்றது. அதுவல்லாமல் தன்னந்தனியாக நிற்கின்றது.

10. ஒரேதன்மையாகி இருமை இலாத காற்று உலகில் புகுந்த பிற்பாடு தான் புகுகின்ற இடத்தைப் பொறுத்து வெவ் வேறுவது போல் அதேதன்மையாக இருமையிலாத ஆத்மா எல்லாப் பொருளிலும் இருப்பது வெவ்வேறாக மாறிக் கொள்கின்றது. எப்படி எனின் அது அது போகும் இடத்தைப் பொறுத்தது எனினும் போகும் இடத்தின் தொடர்பின்றித் தான் தனியாக நிற்கின்றது

11, சூரியன் எல்லாக் கண்களையும் பார்க்க உதவுகின்றது. ஆனால் அது கண்களின் தொடர்புடைய தல்ல. அதுவன்றி வேறு பொருள்களுடன் தொடர்பு கொள்வதல்ல. தன்னந்தனியாக வானில் பிரகாசிப்பது அதே போன்று ஆத்மாவும் தன்னம் தனியாக நின்று உலக மயக்கங்களில் சுகதுக்கங்களில் தான் கலப்பதில்லை.

12. தன்னந் தனியான ஒரு மேல் அதிகாரி அரசில் இருக்கின்றார்: அவர் எல்லா உயிரினங்களிலும் உள்ளாக உள்ளவர் அவரே தனது ஒரு வடிவை பல பல வடிவாகப் பிரித்துக் கொண்டவர். அவர் ஆநந்த வடிவினர்: இந்த உள்ளத்துள்ள ஆனந்த விளைவை புத்திசாலி தன்னுள் காண்கிறான். மற்றவனால் முடியாது.

13. எல்லா வெளிப் பொருள் அனைத்தின் உள்ளாக ஒரு பொருள் உண்மை வடிவாகி என்றும் உளது, அது உணர்வுள்ள எல்லா உயிரினங்கள் உள்ளாக உளது. அதுவே தன்னம்தனியாக நின்று வேண்டுவார் வேண்டுவதைகொடுத்து திருப்தி செய்து கொண்டிருக்கின்றது. இந்த தனக்குஉள்ள இன்பம் புத்திசாலி கட்டு மட்டும் உள்ளது. மற்றை யோர்க்குஇல்லை

14, முனிவர்கள் உணர்ந்த இந்த விபரித்துச் சொல்லிட முடியாத பேசரிய மேலான ஆநந்தத்தை "அதுவே அது" எனக் கூறுகின்றார்கள். நாச்சிகேதனே அது அப்படியாயின் நான் எப்படி அதை உணர்வேன். அது தன்னந்தனியான ஒளியாவது: அது மிகவும் விரிந்த ஒளியாகப் பிரகாசிப்பதோ இல்லையோ!

15. அங்கு சூரியன் உதிப்பதில்லை. சந்திரன் உதிப்பதில்லை: மின்னல் தோன்றுவதில்லை. நெருப்பைப் பற்றி பேச்சே இல்லை. அவர் [illegible] ஒளிர்கின்றார், அவரின் பின்னாக எல்லாம் ஒளிவிட்டுக் கொள்கின்றன: அவரின் ஒளியால் எல்லாம் ஒளி பெற்றுக் கொள்கின்றது:

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நாவலர்க்கும் விபுலானந்தர்க்கும் விழா எடுப்பீர்! நாட்டில் அந்தணரும் ஆலயமும் வேதநெறிதவறப் பார்த்திருக்கலாமா?

## பெரியோர்க்கு விழா எதற்கு? மேன்மைநெறிகளை விளங்கவைக்க எனின் நெறிகள் மேலும் சீர்குலைந்தால் விழாவின் பயன் யாது? விழா என்பது வீண் பொழுதுபோக்கா? அல்லது விழாச் செய்வார் தம் புகழை வெளிப்படுத்தலா?

எமது இலங்கை நகர் சைவ மக்களிடை உண்மை விளக்கமிலாத பேதமை எவ்வளவு மிகுந்துளது என்பதைக் காட்ட வேண்டில்; ஆறுமுக நாவலரை ஐந்தாம் குரவர் என சொல்லும் அச் சொல் ஒன்றே போதுமானது. இந்த வகையாக ஆறுமுகநாவலரை ஐந்தாம் குரவரென போற்றுவோர் திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கர் முதல் அருளாளரைப் பற்றி ஏதும் அறியாதவர் என்றே சொல்லலாம்.

மேடையில் நின்று சிலரை முகமன் சொல்லி பாராட்டும் பொழுது அப் பாராட்டுதல் உண்மையிலாதவகை மாறுபடுமேல் அது மிகப் பாரதூரமான விளைவை உண்டாக்கிவிடும். ஓர் நிலைக்கு தகுதி இல்லாதவரை தகுதியுடையார் என வீம்பு பேசினுல் அது நாட்டிலேயே பெரும் பழியையும் பகையையும் பெருக்கும் என கந்தபுராணம் தெரிவிக்கின்றது. இந்த நிலையில் ஆறுமுகநாவலரை ஐந்தாம் குரவர் என பேசப் போனுல் அதுவும் பெருமக்களாகும் நால்வர் பெருமக்களின் அருள் நிலையைச் சீர்குலையச் செய்வதுமன்றி நாவலரின் ஆன்மசாந்திக்கே பெரும் பழியை விளைவிப்பதொன்றுகும். அதுமட்டுமன்றி இதை பேசினேர் கேட்டோர் யாவர்க்கும் துன்பத்தை பெருக்கிடும் பேச்சாகும் என்பது பல பல பெரியோர்கள் கருத்தாகின்றது.

இந்தக் கருத்தை எனது பத்திரிகை மூலம் வெளிப்படுத்தி விடுமாறு சில பெரியோர் என்னைக் கேட்டுக்கொண்டனர்; அவர்கள் கருத்து நாவலரை ஐந்தாம் குரவர் என்பது நால்வரைக் கீழ் இறக்குவது போலாகும் என்பதே. இப்பொழுது நாம் நால்வருடைய சிறப்பைஉணர்வோம். இந் நால்வரும் எம்போன்ற வினைக்கேற்ப உடம்பெடுக்கும் மனிதர் அன்று. இவர்கள் திருவருள் வசத்தால் எம்பிரான் சிவன் ஆணைவழி உலக உய்வின் பொருட்டாக இங்கு வந்த அவதார புருஷர் எனலாகும், இவர்கள் யாவரும் இங்கு அவதரித்து பிறக்கு முன்பே சிவன் திருக்கைலையில் வாழ்ந்தவர்கள். எக்காலமும் சிவசம்பந்தமுடன் இருந்தவர்கள். முதல் திருஞானசம்பந்தரை எடுத்துக்கொள்வோம். அவர் தமது வாக்காகவே இந்த உண்மையினைச் சொல்கின்றூர். அவர் திருவாக்கு முன்னுல் தரப்பட்ட தேவராத்தில் காணப்படுவது. அதில் அவர் ''திருந்தடி மறக்குமாறு இலாத என்னை மையல் செய்து மண்ணின் மேல் பிறக்குமாறு காட்டினுய்'' என்கின்றூர். இதன் கருத்தை உணருங்கள்! தாம் இங்குவரவேண்டிய காரணம் இல்லை; ஆனுல் இறைவன் ஆணைப்படி வரவேண்டி வந்துள்ளது என்கின்றூர். இதனை பெரிய புராணம் ''தம்மேலைச் சார்புணர்ந்தோ சாரும் பிள்ளைமைதானே'' என அவர் குளக்கரையில்நின்று அழுதபோது பால் ஊட்ட வேண்டி வந்த காரணத்தை எடுத்துக்காட்டுகிறது, இதை இலங்கைநகரில் உணர்வார் அல்லது உணரவல்லார் எத்தனை பேர்? என்பது தான் பெரும் மனக்கவலையை விளைவிக்கின்றது.

அடுத்து திருநாவுக்கரசரை பெரிய புராணம் கூறுகின்ற பொழுது ''முன்னமே முனியாகி எனை அடைய தவம் முயன்றுன்'' என சிவன் திலகவதியார்க்கு அருள் செய்த வரலாறும்; ''சாவாமே காத்து எனை ஆண்டாய் போற்றி'' என்று திருநாவுக்கரசர் தமது பதிகத்தும் கூறுகின்றூர். இதனை உணர்ந்தால் இவர் இவ்வுலக மக்களில் ஒருவரல்லர் எனத் தெளியலாம். அதுமட்டுமல்லாது அப்பூதியடிகள் அவரை வழிபடும் மூர்த்தியாகிக் கொண்டவரலாறும் அவர் தெய்வமே எனக் கொள்ளலாம். அது மட்டன்றி பெரியபுராணம் அவரை ''வாகீசத்திருவடியாம்'' எனப் போற்றுதலால் இவர் மனிதப்பிறவி அல்ல என்பது தெளிவு

அப்பால் எம்பிரான் சுந்தரரை எடுத்தால் அவர் தமது திருவாக்காக ''மாயம் காட்டி பிறவி காட்டி மறவா மனம் காட்டி காயம் காட்டி'' என்கின்ற போது தம் வரவு திருவருள் வசமான ஆணையே என்கின்றூர். அடுத்து சேக்கிழார் அவரையே தான் வழிபடு கடவுளாகக் கொண்டேன் என்பதற்கு சான்றுக அவர் திருவடி நான் என்றும் துதிக்கின்றேன் ஏது காரணமாக ஏனின் இந்த உலக லாழ்வில் வரக்கூடும் சங்கடங்களால் பாதுகாத்து மேல் தூக்கி என்னை எடுத்திடவல்லார் அவர் ஒருவரே என்னும் பற்றுலே அவர் திருவடி மறவாது என்றும் போற்றுவேன் என்கின்றூர்;

பெருமிழலைக் குறும்பர் என்னும் நாயனூர்க்கு யோக நிலையும் அட்டமாசித்தியும் கைவரப்பெற்றது சுந்தரர் பெருமான் திருவடி போற்றலால் எய்தியது என்றுல் இதற்கு மேலாக என்ன காரணம் நாம் இங்கு இவர் அவதார புருஷர் என்பதற்கு சான்றுகக் காட்டவேண்டும்.

அடுத்து மாணிக்கவாசகரை எடுத்துக்கொண்டால் அவரை திருநாவுக்கரசர் தம் பதிகம் ஒன்றில் ''நந்தியை வாகீசனுக்கிக் கொண்டார்'' என்ற ஒரு வார்த்தை கூறுகின்றூர். எனவே இவரும் சாதாரண மனிதப் பிறவி உயர்வு பெற்ற ஓர் ஞானி அன்று. இவர் அங்கிருந்தவர் உலக உய்வின் பொருட்டாக இங்கு வரப் பெற்றவர் என்பது தெளிவு.

இவர்கள் யாவரும் வந்து இவ்வுலகில் திருத்தொண்டின் மூலம் சிவனருளைப் பெற்றவர். அங்கிருந்த அவர் இங்கு வந்து திரும்பவும் அங்கு சேர தொண்டு மூலம் அருள்பெற வேண்டுமோ என்றுல் அவர் தொண்டு தமக்காக அன்று எமக்காகவேயாகும். இதுதான் வழி என்று காட்டுவதற்கேயாகும். இதை எல்லாரும் நாம் உணரவேண்டும். இந்த நால்வரில் யர்ருடைய உடம்புதானும் உயிர் நீங்கிய பின் பூமியில் விழவில்லை. அல்லது நோய் வந்தால் மருந்துண்ணவில்லை. இறைவன் அருளால் தம் நோய் மாறப்பெற்றவர்.

தாம் இறைவனைப்பாடும் பொழுது அவன் புகழுடன் அவனை அடைவார் ஒழுகவேண்டிய அறங்களையும் பாடி உள்ளார்கள். ஒரு உதாரணத்தை இங்கு குறிப்பிடுவோம்! காஞ்சியில் சென்று எம்பெருமானைக் கண்ணுறும் திருநாவுக்கரசர் எடுத்த எடுப்பில் [illegible] சர்க்கு அரியானை; கரவார் பால் விரவி ஆடும் [illegible] கூறுகின்றூர். இந்தக் கரவு என்றுல் என்ன உள்ஒன்று வைத்து புறமொன்று பேசுதலாகும். இதை நாம் விளங்கிக்கொண்டு எமது நெஞ்சை அதன் நிலையில் திடப்படுத்திக் கொண்டு உலகில் இன்றுள்ள சுவாமிகளைக் கவனிப்போம்.

கிருபானந்தவாரியாரை சுவாமி என்கிறூர் தென் இந்தியப் பேதையர் பலர். வாரியாரின் வாழ்வு என்ன? வட்டிக்குப் பணம் கொடுத்து வாங்கும் வித்தகம் என்ன? இதைத் தென்னிந்தியாவில் அவரைச் சுவாமி என்னும் பேதையர் விளங்குவாரோ? பஞ்சமாபாதகங்களைக் கூசாது செய்யும் பலர்; மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் என்பது போல, வாரியாரை பித்துக்குளி முருகதாசை சுத்தானந்தபாரதியாரை சுவாமி எனலாம்.

திருமூலர் மிகத்தெளிவாக வட்டிமேல் வட்டிகொண்டு ஈட்டும் பட்டிப்பாதகர் பயன் அறியார்'' என்கின்றூர், எந்த ஒரு தென்இந்திய சுவாமிகள் என்னும் மகிடி வித்தையாளர் இங்கு வந்து காசு கொண்டோடாமல் போனவர். தயவுசெய்து ஒருவரைக் காட்டுங்கள்! அடுத்து கட்டுக்கணக்காக காசு கொண்டோடியவரை திருமூலர் என்ன சொல்லுகிறூர் ''பட்டிப்பதகர்'' என்கின்றூர். பொல்லாத பாவிகள் என்கின்றூர் இதை யாரும் இலங்கைச்சைவரான நீர் உணரவல்லீரோ.

இன்று இந்த உலகிலே மேடைமேல் நின்று கண்டபடி பேசிடும் நிலை தென்இந்தியாவில் உள்ளார்க்கும் இலங்கையில் உள்ள தமிழ் ஆசிரியர்க்கும் பண்டிதர்க்கும் அவையினுடைய மணிக்குமே உளது! இதில் கொஞ்ச வித்தியாசம்: தென்இந்திய பேச்சாளன் காசு கொடுத்தால் தான் புகழ்ந்து பேசுவான். ஆனுல் இலங்கையான் காசு கொடுக்காமல் மேடை கொடுத்தால் காணும் அப்படியே மனிதனை கடவுளாக்கி கடவுளுக்கு மேலாக வைத்திடுவான்: மேடையில் கண்டபடி பேசுதல் தமிழ்சட்டம்பிமார்க்கு தனியாக அமைந்த ஒரு சிறப்பு. உண்மையில் அவருக்கு உள்ளாக ஏதும் நன்மை இருந்தால் அல்லவோ நிதானமாகப் பேசிடுதற்கு அது இல்லை.

கொக்குவிலில் ஒரு நாள் ஒரு திருவிழாவில் சிவத் தமிழ் செல்வி பேசினு! அவவுக்கு தலைமை தாங்க அந்த ஊர் தமிழ் சட்டம்பி தலைமை வகித்தது. அது தனது முன்னுரையில் என்ன பேசியது தெரியுமோ இன்று சிவத் தமிழ் செல்வி மங்கையர்க்கரசியாரிலும் மேம்பாடாக சைவம் வளர்க்கிறூர் என்ற போது இந்தப் பேதைச் சட்டம்பிக்கு மங்கையர்க்கரசி யார் என விளங்குமோ? விளங்கியிருந்தால் இப்படி அந்தப் பேதைச் சட்டம்பி பேசலாமோ?

ஞானசம்பந்தர் மங்கையர்க்கரசியாரைப் போற்றுகின்ற போது மிகுபண்பாக மிகு திறமாகப் போற்றுகின்றூர்: சிவன் திருநீற்றினை வளர்க்கும் பங்கயச் செல்வி பாண்டிமாதேவி என்று கூறிவிட்டு தனித்து ஓர் பெண்ணைப் புகழுதல் தமிழ் மரபு அன்று ஆதலின் குலச்சிறையாரையும் சேர வைத்து பாடுகின்றூர்.

மங்கையர்க்கரசியாரும் கோயில் மேடைமேல் ஏறி நின்று பிரசங்கம் செய்தவரோ? அல்லது கடைக்குக் கடை காசு சேர்த்து திரிந்தவரோ? அல்லது தான் பாண்டிமாதேவி பட்டத்திற்குரியவள் அதனுலே பாண்டி நாட்டில் தனக்கு உதவியாக சிலரை சேர்த்து சண்டித்தனம் முதலியன செய்து தன் எதிரிகளை அடித்து நொருக்குவித்து பெரும் துயரம் விளைவித்து சமயம் வளர்த்தாளோ?

தனது கணவன் சமணசமயத்தினன், அத்தகைய நிலையில் அவனுக்கு வாழ்க்கைத் துணைவியாக அமைந்த மங்கையர்க்கரசி தன் கணவனை வெறுத்துத்தள்ளி விட்டு இருந்தாளோ? கணவனுக்கு நோய் கண்ட போது இவர் எனக்கு மாறுனவர் இவரைப் போய் பார்க்கக் கூடாது செத்துப்போகட்டும் என்று நினைந்திருப்பாரோ.

அல்லது நான் ஒரு பட்டத்துத் தேவி ஒரு புதிய சாதனையை உண்டாக்குவோம். பெண்களே எல்லாரும் வாருங்கள் திருவாலவாய் தேர் இழுப்போம். ஆண்களின் அருகில் நின்று சமமாக இழுப்போம் சீலை உரிந்து விழுந்தாலும் தெரியாமல் இழுப்போம்! பெண்கள் தேர் இழுக்க வெட்கப்படுவது தான் வெட்கம் கெட்ட செயல். வீரமடந்தையர் நாங்கள் வீரமுடன் தேர் இழுப்போம் வருக வருக என்று அழைத்திருப்பாரா. பெண்ணினத்தை அடக்கி ஒடுக்கிறுன் அரசன்; பெண்ணினத்தின் பெருமை தர வந்த நான் ஆண்களுடன சமம் காண வந்த நான் பெண் இனத்தை உயரவைப் பேன் என்று வீரம் பேசி இருப்பாரா?.

இன்று இலங்கை இந்தியாவில் உள்ள சிவத்தமிழ்கள் செந்தமிழ்கள் பைங்கிளிகள் பசுங் கிளிகள் பசுங்குயில்கள் மயில்யாவும் பாடி ஆடி ஓடுவது போல் அவளும் பாடி ஆடி ஓடினுளா? மங்கையர்க்கரசியாரை சம்பந்தர் தெய்வ அணங்காக கற்பின் அரசியாக சைவத்தின் குன்றுவிளக்காக தவத்தின் சுடராக பெண்கட்குற்ற அடக்கம் அமைதி அருள் நிலை இவற்றின் தோற்றமாக சம்பந்தர் காண்கின்றூரே ஒழிய அன்று காதலிலே தோல்வியுற்று கணவனையும் பிழை செய்து கற்பு நெறி அறியாது மேடையில் ஏறி பேசவல்ல பெண்கள் போல காண்கின்றூரா? சம்பந்தர் மங்கையர்கரசியாரின் தவச்சிறப்பற்றி தான் அவளைப் புகழும் பதிகங்களில் சம்பந்தர் காண்கின்றூரே ஒழிய அவளினுடைய வேறு ஏதும் செயல் காணவில்லை. கொக்குவில் கிழக்கு பேதைச் சட்டம்பிக்கு இவை விளங்குமோ? தான் அறியாததைப் பேசி பொது மக்களையும் பாழாக்கி சைவ நெறியில் பெரும் வழுவைச் செய்யலாமா? அல்லது அதைக் கேட்டிருந்த சிவத்தமிழ் தன்னை சொல்[illegible] என்று சொல்லி இருக்கலாமே? இவை எல்லாம் தற்புகழ்ச்சி[illegible]தையே காண்பிக்கின்றது. என்று தான் தமிழினம் உய்வதற்கு இந்த பேதையர் கூட்டம் திருந்துமோ தெரியாது; இதே போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையில் தான் ஆறுமுகநாவலரையும் 5ம் குரவர் என சொன்னார் பல பேதையர். இதைக் கூசாது சமயக் கல்வித்துறையில் அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் அரசாங்கத்தை நாம் குறை சொல்ல முடியாது. இதை பரப்பிய பேதையரையேகுறை சொல்ல வேண்டும். இன்று ஆறுமுகநாவலரை 5ம் குரவர் என்பது பேடித்தனத்தின் மேல் பேடித்தனமாகும்.

ஆறுமுகநாவலர் சமயத்துறையில் என்ன அற்புதம் நிகழ்த்தினார் என்ன அருள் வழி காட்டினார்?. தமக்கு உற்ற நோயை மருந்தின்றி தீர்க்க இயலாத நாவலரை எவ்வாறு 5ம் குரவர் எனக் கூறலாம்?. ஒரு வார்த்தை பேசும் போது சிந்தித்தல்லவோ பேசவேண்டும் பேதை மக்களே! சமயத்துறையில் அவரை போதனாசிரியர் என்று சொல்லி இருக்கலாம். அதை நாம் இங்கு குறிக்க வரவில்லை அது அவரவர் விருப்பம். ஆறுமுகநாவலரைப் போல எத்தனையோ பெரியார்கள் யாழ்ப்பாணத்தில் தோன்றி இருக்கிறார்கள். சைவத்திற்கு நல்ல பணி புரிந்திருக்கிறார்கள். அவர்களை எல்லாம் இனி 7ம் குவரர் 8ம் குரவர் என்று சொல்லலமா? இந்த வகை குயவர் பானை செய்வது போல் குரவர் செய்யப் போனால் எத்தனை குரவராய் முடியும்? பின்னர் குரங்குகளும் 15 வது குரவராக வரமுடியும். ஆறுமுகநாவலரை 5ம் குரவர் எனச் சொல்வி விழா எடுக்கும் பேதையரே உங்களுக்கு சைவம் விளங்கினால் உங்கள் கையை நெஞ்சில் வைத்துக் கொண்டு நீதியை சொல்லுங்கள். நீங்கள் இப்படிச் செய்வது சரிதானோ உண்மை ஒன்று இருக்க உண்மையிலாததை உண்மைஎன்று சொல்லலாமா? எவ்வளவு காலமாக இந்த பேதமையைப்பெருக்கப் போறீங்கள்.

இன்று சைவர்க்கு விளங்கவேண்டியதுஎம் நாட்டில் சைவநெறி தழைப்பது என்றால் எங்கள் சமயத்தில் குருமார் எனப்படும் அந்தணர்கள் நெறியால் ஓங்க வேண்டும்; நெறியுடன் வாழ வேண்டும் சிந்தையில் தீதில்லா வகை அவர்கள் ஒழுக வேண்டும், இதற்கு நாம் என்ன செய்து உள்ளோம்? அந்தணர்களை நீர் நெறி தவறுநீர் என்று கேட்டால் அவர்கள் எடுத்தவுடன் நீங்கள் சரியாய் நடக்கிறீரேய எனக் கேட்கின்றனர். நீங்கள் என்று அவர்கள் குறிப்பிடுவது யார் என விளங்கினீரோ? திருஞானசம்பந்தப்பெருமான் எம்சமய நெறியை வைகைஆற்றில் ஏடிடும்போது நன்கு விளக்கிக்காட்டிஎம்சமய நெறிசிறக்க வேண்டுமெனில் முதற்கண் வாழ்க அந்தணர் என்று சொன்னாரே; அடுத்து பசுக்கள் தேவர்கள் வாழ்க என்றார். ஆகையினாலே இந்த வகை அந்தணர் வாழ்க என்பதைஉணர்ந்தால் அந்தணர்க்கு வாழ்வுயாகம் செய்தல் அர்ச்சனை புரிதல். யாகங்கள் மூலம் தான் தேவர்க்களை பிரீதி படுத்தாலாம். தேவர்கள் வாழ்ந்தால் தான் நாட்டில் மங்களம் நிலவும்; நாட்டில் பகை இராது பிணி இராது: அதை விட்டு அசுரர் வாழ்ந்தால் பகையும் கொலையும் பிணியுமே மலியும்.

இந்த சைவ நெறியின் மிக நுணுக்கமான உண்மையை நீங்கள் உணரமாட்டிரோ? அரசனையும் ஓங்கச் சொன்னார் தம்பதிகத்து. எதற்காக? மேலோங்கிய உள்ளத்தை அரசன் பெறட்டும் என்பதற்காக. உள்ளம் கபடமின்றி உயர்ந்தால் தான் உண்மையை உணர முடியும்.

கபடம் கரவு முதலியன நிறைந்த மக்களின் ஆட்சியில் நாட்டு மக்கள் துயர நிலையில் சோம்பல் மிகுதியால் பகை முதலிய பாவச் செயல்களில் ஈடுபடுவாரே அன்றி உண்மை வழிக்கு நாட்டு மக்கள் திரும்பார்கள், இதனாலே தேவர்களுடைய அநுக்கிரகம் பெறுதற்கு உண்மை உடையர்ரின் உயர்ந்த ஆட்சியும் கூறப்பட்டது. இதை ஆர் ஒருவர்நீங்கள் உணரப் போகின்றீர், நம்மில் உள்ள எந்த ஒரு சைவருக்கு இது விளங்கப் போகுது? ஆனதினாலே அந்தணர் குலம் தம்கடமையில் வழுவிலாது சோம்பலின்றி கரவின்றிச் சிந்தையில் அழுக்கின்றிச் செய்ய வேண்டும். இன்று அந்தணர் குலம் தமது தொழிலை சாதித் தொழிலாகக் கொள்கின்றனர். அவர்களை ஒரு சாதியாக திருஞானசம்பந்தர் கருதவில்லை; சமுகத்திற்கு பெரும் பயன் உள்ளவராகவே திருஞானசம்பந்தர் கருதுகின்றார். அவர்களை ஒரு தொண்டராகவே கருதுகின்றார்.

இந்த உண்மைகள் எத்தனை அந்தணர்க்கு விளங்கும்? யார் உணர்ந்து திருந்துவார் என்பதை நினைக்கவே பெரும் கவலையாக இருக்கிறது. திருமூலர் பெருமான் செந்தமிழால் ஆகமம் சொல்லவந்தவர். தமது திருமந்திரத்தில் அந்தணர் குலத்தை சீர் குலையாது பாதுகாத்தல் அரசின் கடன் என்கின்றார். அந்த திருமூலர் பெருமானை 5ம் குரவர் எனச் சொன்னால் அது மிக நன்றாகும் நீதி உடையதுமாகும். நால்வரில் ஒருவரான சுந்தரரே திருமூலரை எம்பிரான் திருமூலர் என்கின்றார்; அவர் தான் சைவ மக்களுக்கு திருமந்திரம் மூலம் உபதேசம் செய்தவர். அத்தகையோரை எல்லாம் புறக் கணித்து விட்டு ஆறுமுக நாவலரை 5ம் குரவர் என விருப்புக் கொண்டு பேசி விட்டீர்கள். சைவ நெறியில் பழுது உண்டாக்கி விட்டீர்கள்.

இன்று அந்தணர் குலம் சீர் கெட்டுப் போக ஒழுக்கக் கேடு மிக கபடம் வஞ்சனையால் நிரம்ப இதை எல்லாம் நேரில் கண்டு கொண்டும் சைவ நெறியில் மூலத்துற்ற நோயை உணராது திரும்பவும் திரும்பவும் பல பல விழாக்கள் எடுத்து எவ்வளவு கோடி பணத்தை வீணாக்கின்றீர்? எத்தனையோ கோவில்கள் கட்டிடங்கள் சீர் அழிந்து கறையான் புற்றெடுத்து ஒழுங்கற்ற பூசைகள் பாதகங்கள் நிகழஇவை எல்லாம் ஒரு புறம் ஒதுக்கிவிட்டு சிலர் விழா என்ற பேச்சில் பலருக்கும் விழா எடுத்து பல பேதமையான செயல்களைச் செய்கின்றார்கள். உண்மையில் இதைப் பார்க்க பெரும் வேதனை ஆகின்றது. இத்தகைய விழாக்கள் உண்மையில் தரும நெறியையும் தவ நெறியையும் சிதைக்கின்றன.

உண்மையிலாரிக்கு உண்மை என விழா எடுக்க அதனால் இன்று மாணவர் சமுதாயமும் நிலை தவறி நெறி தவறிப் போய்விட்டது எந்த ஒரு வீட்டில் ஒரு சைவப்பிள்ளை வயது வந்தவர் தன் தந்தையை மதிக்கிறார் தாயை மதிக்கிறார் பெரியோரை கணம்பண்ணுகிறார் கோயிலில் பயபக்தியுடன் ஒழுகிறார்? இவற்றை இந்தஒரு வீட்டில் இப்படி இருக்கின்றது எனக் காட்டுவீரோ? நாவலருக்கு விழா எடுப்பபர்களுடைய இல்லங்களிலும் அப்படி இருக்கிறார்களா? அவர்கள் காட்டுவார்களா? தங்கள் பிள்ளைகள் எல்லாம் அதிகாலையில் எழுந்திருப்பார்கள் திருநீறு பூசுவார்கள் தீட்சை வைத்தார்கள். புலால் உண்ணார்கள், குடும்பி இல்லாதிருந்தாலும் தலைமயிரை மனிதப் பண்பில் வளர்க்கிறார்கள்? கோயிலுக்கு போகு போது தோய்த்துலர்ந்த வேட்டி அணிந்து போகின்றனர் சட்டை அணியாமல் கோவிலுக்கு போகின்றார்கள், நாவலர் சைவ வினாவிடையில் எழுதியது போல் கோவில் செய்யத்தகாத குற்றங்களை செய்யாதிருக்கின்றார்கள் என்பதை எல்லாம் நிரூபிப்பீர்களோ?

இந்த விழா என்றபேதைத்தனம் எங்கள் யாழ்ப்பாண நாட்டிலே தட்டிக் கேட்பார் இல்லாதவகை பெருகிக் கொண்டது. எடுத்ததற்கெல்லால் விழாத்தான். வழிபாடே விழாவாகின்றது. கும்பாபிஷேகம் ஒரு விழா, அர்ச்சனை ஒரு விழா. கும்பிடுவது விழா. பிரசங்கம் விழா. பூக்கட்டுவது விழா. எனது அப்பனே தூய வழி பாடு யாவும் விழாவாக மாறி வேடிக்கையாகின்றது.

இந்த விழாவின் நோக்கத்தை நாம் உண்மையில் உணர்ந்தால் சில புகழேந்திகள் தங்களுடைய பெருமையை உலகுக்கு காட்ட நாவலர் போன்றவரை முன்வைத்து விழா எடுக்கின்றனரே ஒழிய இதனால் வேறு ஏதும் பயனில்லை. இதனால் யாரும் திருந்தினாரில்லை. இதைநமது சமுதாயம் என்று உணரப் போகின்றது.

# சிவனடியார்களே நாட்டில் நன்மை விளைவிக்க வல்லவர்

சிவனடியார்கள் எதை விரும்புகின்றாரோ அது சிவன் செயலாகின்றது. அதுதான் சிவன் அவர் விரும்பியதைச் செய்வான் என்பது. அதை உணர்வதெனின் அந்த நிலையும் நன்மையுடன் சிறந்த புண்ணிய விளைவைத் தந்து நிற்கும். இப் புண்ணியம் பெற்றார் வேறு நிலையில் துயரம் எக்காலமும் பெறார். இது உண்மை என பெரிய புராணம் வலியுறுத்துகின்றது.

சிவனடியார்கள் யார் என்பது தான் கேள்வி. அவர்கள் எப்படிஇருப்பார்கள்? அவர்கள் கொள்கை யாது? அவர் என்ன பேசுவர்? என்ன செய்வார்? இவைகளை நாம் ஆராய வேண்டுமே?

சிவனடியார் என்று விட்டால் பொதுவில் எல்லா உயிரும் சிவன் அடிமையே எனும் நிலை வந்தாலும்; உலகில் தோன்றும் எல்லா உயிரையும் நாம் சிவனடியார் என ஏற்க இயலாது? ஏனெனில் இன்றைய உலகில் மக்கள் விரும்புவது சாப்பாடு சோக்பண்ண காசு உத்தியோக உயர்ச்சி வாகனச் சிறப்பு பாராட்டு படக்காட்சி பட்டமளிப்பு விழாக்கள் விநோத இசை காமச்சுவையுடைய பாடல் இவ்வளவுமேயாகும். இந்த விருப்பத்தின் இடையாக எவரையும் தெண்டித்து நாம் வரப்பண்ண வேண்டியதில்லை.

அது உலகில் பிறந்தார் எவர்க்கும் இயல்பில் பொருந்துவது. அதை எவரும் விரும்புவார்கள். அது தான் மயக்கம் எனப்படுவது. ஒரு பாடல் வானொலியில் வரும் போது எத்தனை குமர்ப் பெண்கள் ஆண்கள் மிகு அக்கறையுடன் நின்று கேட்கிறார்கள்!

போதாதற்கு இந்த வானொலிப் பெட்டியினை பிரயாணம் செய்யும் போதும் போட்டுக் கொண்டே போகிறார்கள், றெயிலில் காரில் பஸ்ஸில் சையிக்கிளில் நடக்கையில் எல்லா நிலையிலும் வானொலிப் பெட்டிதான்.

உயர்ந்த சாதி எனப்படும் பிராமணன் வானொலிப்பெட்டி வைத்தே பூசை செய்வான் புக்கை பொங்குவான், அது இல்லாவிட்டால் ஐயோ பிராமணனுக்கு செத்தவீட்டில் சலிப்பிலும் பெரும் சலிப்பே வருகின்றது. வீட்டில் இத்தனை காமச்சுவை உடைய பாடல் கேளாட்டால் பிராமணப் பெண்சோறு காய்ச்சாள்.

ஒரு வீடு பிரபல்யமுடையவர் வாழ்கிறார் என்றால் அங்கு அதை எப்படி நாம் காணலாம் என்றால் வாசலில் நாய் கடிக்கும் கவனம் என்ற போர்ட் இருக்கும், அடுத்து உள்ளுக்கு ஒரு கார் அல்லது இரண்டு அடுத்து வானொலிப் பெட்டிகள் அவை ஒன்றல்ல பல பல தரமுடையதாக இருக்கும். எல்லாம் ஒலிப்பதிவு நாடாவுடன் விளங்குவன. இவர் கோயில் முதலாலி ஆகவோ திருப்பணிச்சபையினராகவோ இருக்கலாம்.

இது திருவுடையவர் நிலை இந்தத் திரு உலகியல் நிலையில் திருவாகும், ஆனால் சிவனடியார் நிலையில் திரு எவ்வாறு அமைந்தது என்றால் கேடும் ஆக்கமும் கெட்டதே திருவாகின்றது. நன்மையும் தீமையும் வறுமையும் செல்வமும் உயர்வும் தாழ்வும் யாவும் அற்ற ஒரு தூய நிலையைப் பெற்றவரே சிவனடியார்கள். இது பெறற் கரியதும் மிக மிகக் கடினமுடையதுமாகும்.

உலக திருவின் மேல் ஆசையை அதை காண்பவர் யாவர்க்கும் எழும். அது தவறில்லை அதுதான் உலகம். இந்த ஆசையை நிற்பாட்ட முடியாது இது கலிஎன்று பெரியோர் சொல்வர் இதனை புலமை உடையோர் "பொது" என்று இலக்கணம் சொல்வர், இதன் கருத்து இந்த மன எழுச்சி எல்லார்க்கும் எக்காலமும் என்றுமே எழுதலால் இதன் விருத்தியில் இன்னமும் இன்னமும் மனம் போதலால் யார்க்குமே பொதுவாக வருதலால் இதனை 'பொது' என்றே கூறினார்.

இதனைத்தான் திரு நாவுக்கரசர் தமது ஒரு தேவாரத்தில் பொது என்று கூறுகின்றார். இதனை அவர்; பொது நீக்கித் தனைநினையவல்லோர்க்கு என்றும் பெரும் துணையை என்கின்றார். ஆகவே சிவனடியார் இலக்கணம் பற்றி ஒரு வார்த்தையில் உலக மக்கள் விரும்பும் சுகங்களை நீக்கிக் கொண்டவர் எனலாகும்,

இந்த வகையில் அருள் சிறப்பை பெறுவதெனின் பொதுவான மயக்கம் நீங்க மன இயல்பு பெறவேண்டும். இத்தகைமைபெற்ற பரமசாதுக்கள் சங்கமே சிவனடியார் கூட்டம்,

இதைத் தவிர்ந்து வேறு உலக பந்தங்களில் ஈடுபட்டோரை சுகங்களைப் பெற விரும்புவோரை நாம் பெரியவர் எனப் போற்றலால் துன்பமே மிகும். அது அருள் நெறியாகாது.

பத்திமையும் அடிமைத் தன்மையும் நிறைந்த ஒரு வாழ்வில் தம்மையும் எண்ணாது நிற்கும் பெருமக்களை நாம் போற்றுதலே அறிவாளியின் கடன்-

அவர்களைப் போற்றுவதெனிலும் அவர் காட்டிய அறநெறிகளை சிந்தித்து கடைப்பிடித்து ஒழுகிட வேண்டும். விழாக்கள் எடுப்பதிலும் உயர்ந்தோர் காட்டிய அறநெறிகள் நாட்டில் நிலவுகின்றதா? நிலவச் செய்வது எவ்வாறு என்பதை நினைதல் நலம். விழா எடுப்பது மிகு சுலபம் விளங்கவைத்தல் மிகு கடினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிராமணன் மிலேச்சனானால் அவனைப்போல் பேதை பிறர் இல்லை

உலகில் அறிவால் உயர்ந்த பெருமக்கள் அவதரிப்பது இப் பூமியில்: இப் பூமியில் தான் தேவரும் அவதரித்து சிவன் திருவடி பேணி உயர்ந்த நெறிகளை அடைந்து பின்னர் எல்லையற்ற சிவபோக இன்பத்தை அடைந்து கொள்வார்.

இப்படியாக தேவரும் வந்து அவதரிப்பது இப்பூமியில் பரதகண்டத்தில் மட்டுமே என பெரியோர் கூறுவர். இவர்களது அவதாரம் சிவன் அருளைப் பெருக்கி என்றும் அழியாத என்றும் முடிவு பெறாத் சிவார்சனையை ஓங்கச் செய்வதேயாகும்.

சிவனது அர்ச்சனை என்றும் முடிவதில்லை. அதனை கௌரிகாமாட்சி தையல்நாயகி என பல பல பேருடன் விளங்கிடும் அம்பாள் ஒருததியே இன்றும் புரிந்தவண்ணம் இருக்கிறாள். இது ஒழிவதில்லை என்பது சிவன் அவளுக்கு மொழிந்த வாக்கு. உலகில் ஒரு மனிதன் பெறக்கூடிய எல்லாப் பேற்றிலும் சிவனை பூவும் நீரும் கொண்டு இவ்வுலகில் பூசிப்பது தான் என்பது சிவன் அருளால் தோன்றிய வேதம் ஆகமம் அத்தனையும் சொல்லும் சுருக்கப் பொருளாகும்,

இதன்படி பார்த்தால் கடவுளை ஆய்வு கூடத்தில் ஆராய்ந்தோ அல்லது பலகோடி வேத ஆகமநூல்களைக் கற்றோ அதனால் பயன் எய்தாது. கல்வி எனும் கடலில் குதித்தவுடன் அது ஓய்வின்றிய சந்தேகம் விபரீதம் முதல் பல வில்லங்கங்களை உண்டாக்கிடும்: இதனை கந்தபுராணத்து கச்சியப்பர் 'இருள் நிறைந்தபெபருங் கடலினுள் நடுயாமத்தில் வீசுகின்ற புயல் காற்றின் இடையே அகப்பட்டவாறு போல; பொருள் நிறைந்த பெருங் கடலாகும் வேதக் கல்வியானது அது சரி இது தவறு என இருவகையாக சந்தேக விபரீதமாக வந்து அலைத்திட அருட்பெருங்கடலே சிவனே; அந்தரமுற்றோம் வாழ்வு களைத்து சலித்தோம்: எம் உணர்வுகள் அடங்கியதில்லை: ஆதலின் பெருமானே; இனியாதும் வேண்டிதில்லை: எம் மனம் ஒருமைப்படுமாறு தேவரீர் இரங்கிட வேண்டும்'' என சனகாதி முனிவர் பிரார்த்தித்ததாகக் கூறுகின்றார்.

இதனை நன்கு நாம் சிந்தித்தால் கல்வியால் பெறும்பயன் வாதாட்டமல்ல சண்டை பிடிப்பது அல்ல கருத்தரங்கு வைப்பதல்ல சமயப் போட்டி விழா மலர் இவை வைப்பதற்கல்ல. கற்ற கல்வி ஒவ்வொருவருக்கும் நற்பயனைத் தருகின்ற வழிபாட்டில் உயர்வைப் பெறுவதற்காகவே உளது என்பதை யாரும் உணர வேண்டும்'

வழிபாட்டின் பயன்தான் ஒருவரிடம் காணப்பெறும் அன்பு அருள் என்றதாகும், ஆதலின் அன்பின் வழியில் தான் அருள் புலப்படுமே அன்றி வேறு வகை அது வராது: இதனை அன்பிலார் எல்லாம் சுய நலமுடையவராய் இருப்பார் அன்புடையவர் தனது எலும்பும் பிறர்க்குரியர் என வள்ளுவர் கூறிடுகின்றார்:

உலகில் உள்ள எல்லாச் சமயங்களிலும் சைவம் ஒன்றே அன்பும் அருளும் என்ற இவைகளை வலியுறுத்துகின்றது. ஆனால் இவற்றில் அன்பு என்றால் என்ன? அருள் என்றால் என்ன? என்பது இன்று யாருக்குமே தெரியாது! எனலாகும்

பிரசங்கத்தில் பேதமை பரப்பும் திருஞானசம்பந்த மடத்து பரமாச்சாரி; திருமுருககிருபானந்தவாரியார்; சிவத்தமிழ் செல்விகள்; சர்வமுட்டாள்களான திருக்கேதீச்சரத் திருபணிக்சபை இவர்களை பேதைமக்கள் பிழையான வழியில் பின்பற்றி பாழ்படுகிறார்கள்: இவர்கள் யாரும்அன்பு என்றால் என்ன அருள் என்ன என்பது தெரியாது. தெரிந்தால் இன்று இத்தனை பொய் ஏமாற்றுகளுக்கு உடைந்தையாய் இவர்கள் இரார்.

அதை அடுத்து மிலேச்ச நாகரீகத்து ஒலிபெருக்கி வானொலி ஒலிப் பதிவுநாடா சினிமா முதலிய பல விபரீதப் பொருள்களில் ஈடுபட்டார்க்கும் அன்பும் அருளும் ஒரு போதும் வராது. அன்பு என்றால் என்பும் உரியர் பிறர்க்கு என்ற போது அதன் நிலையை முதல் விளங்க வேண்டும்: அதன் பயன் என்ன? கருத்து என்ன? என்றால் பிறர்க்கு ஏதும் இன்னல் துயரம் விளைவியாதவாறே இந்த ஒலிபெருக்கி முதலியன முதற்கண் காணப்பட வேண்டும் என்பதாகும்.

ஆதலினாலே சிவார்ச்சனையின் பயன் அன்பும் அருளும் பெறுத லே ஆகும். இந்த சிவார்ச்சனையின் மூலமே இதைப் பெறலாமே அன்றி வேறு எக்காரணத்தினாலும் அன்பையும் அருளையும் நாம் வளர்த்திட முடியாது: சிவார்ச்சனை ஒரு தருமம்: அதில் எட்டுணையேனும் அதர்மமான செயல் இருக்கவே கூடாது, சிவார்ச்சனை புரிவோர் தம் செயலுக்காக பிற உயிரை வருத்தியோ பிறரை மனம் நோகப் பண்ணியோ எந்த விதமான செயலை இந்தவகை செய்தோ தம் கருமத்தைச் செய்தால் அது தருமம் என்ற வகையில் அடங்காது: அது அதர்மமாக முடியும் என்பதை எல்லா மக்களும் விளங்க வேண்டும். ஓர் கோயில் எல்லாருக்கும் பொதுவான இடம், அங்கு அர்ச்சனை என்ற கோட்பாடு தான் பிரதானம். இந்த அர்ச்சனை மூலமே உலகில் அருள் பெருகுகிறது. இந்த அர்ச்சனைக்கு உருவம் அன்பு. அன்பிற்கு பீடம் தருமம். தருமத்தில் நிலை கொள்ளாது இருந்தால் அன்பு எவராலும் பெறமுடியாது: மேடைப் பேச்சில் மட்டும் அன்பு பேசி கீழ் இறங்கி வந்து வம்புத்தனம் செய்யலாமா? பல பாதகங்களை வஞ்சகங்களை செய்து விட்டு நான் செய்யவில்லை என மறுத்து; நீர் கண்டீரோ? நீர் நிரூபிப்பீரோ? என பல அந்தணர்கள் கேட்கிறார்கள்,

நெஞ்சை ஒழித்து ஒரு வஞ்சகமில்லை நெருப்பில்லாமல் புகை இல்லை' என்பதை இவர்கள் உணரத் தவறுகிறார்கள்' இவைகளை எல்லாம் நன்கு நாம் சிந்திக்க வேண்டும், இன்று நாம் ஒரு செயலை நிரூபிப்பது எனின் கோழமை மிகுந்த உலகில் கடினம் என்பது தெரியும், மனிதர்கள் சாப்பிட வழியில்லை நமக்கேன் உந்த வேலை என்று நினைக்கின்ற காலம், இதனாலே இந்த ஒரு கோழமையாலும் பொருளாதார தடுமாற்றத்தினாலும் உண்மையை உறுதியுடன் பேண மக்களிடம் வலு இல்லை.

முன்னர்க்காலத்து மனிதன் உண்மையை உயிரிலும் பேணினன். இன்று உண்மையிலும் பசியும் மானமுமே மிகுகின்றது [illegible] செய்துவிட்டு அதனால் அவமானம் வருகின்றதென்றால் அதனாலே இன்னும் பல பிழையை சொல்லி தாம் செய்யவில்லை என சாதிக்கின்றனர்.

ஒருக்கால் உண்மையில் நின்றும் கீழ் இறங்கியவர் பிறகு எந் நிலையினும் திரும்ப அந் நிலைக்கு வரமாட்டார். உண்மை இல்லாதபடி தருமம் சிறக்காது. தருமம் சிறக்காது இருந்தால் அன்பு சிறக்காது. அன்பு சிறக்காது இருந்தால் அருள் வராது. ஆகவே அன்பும் அருளாலும் தான் உலகை உய்ய வைக்கலாம்: இவை தளருமேல் எல்லாம் நிலை குலைந்து சீர் குலைந்துவிடும். இதனாலேதான் வள்ளுவரும் பொருளை இழந்தவர் திரும்பலும் ஒருகால் பெற்று சிறந்த பொருளாளராக வரலாம்: ஆனால் அருள் அற்றார் அறவே அற்றார், மற்றும் திரும்பவும் அதனைப் பெறல் அரிது என்று விட்டார்:

இதனாலேதான் சந்திரதீபத்தில் அருள் நிலைக்கு புறம்பான பொய்மைகளைச் செய்யாதீர் ஏமாற்றங்களை வையாதீர் உங்கள் செயல்கள் அத்தனையிலும் உண்மையும் தருமமும் அன்பும் சிறக்கட்டும்: இவை இல்லாத வழி எக் காரணம் கொண்டும் அருள் பெற முடியாது என பெரியோரது திருவாக்கை சான்று காட்டினேம். சான்று காட்டி இந்த தவறுகளை நீக்குங்கள் என்றோம். அதை சிலர் தவறாக கருதுகிறார்கள்: நாம் கோயில்களில் உண்மைக்கு மாறான ஏமாற்றங்களை தருமத்திற்கு விரோதமான ஒலிபெருக்கி யந்திரக் கருவி இவைகளின் பாவிப்பை செய்யாதீர் என சொன்னதின் நோக்கம் நாட்டின் நலன் கருதியே ஒழிய யார் மீதும் குறை கூறவில்லை. எமக்கு இந்தத் தமிழினம் பல ஆண்டுகளாக அல்லல்பட்டு வருகின்றது என்பது கவலையான ஒரு நிலையாக இருந்தது: இனப்பகையாலும் குரோதத்தாலும் ஏற்றத்தாழ்வாலும் அடுத்தவரை மதியாமலும் பெரும் நிலைகெட்ட பாவச் செயல்கள் நம்மினத்து பெருகிக் கொண்டது கண்டோம். இன்று எடுத்தற்கெல்லாம் கட்சிகளும் பூசல்களும் எம் தமிழினத்தில்நிறைகின்றதை இல்லை என யாரும் மறுக்கமுடியாது. தருமத்தை உண்மை வழி கடைப்பிடித்தால் இவைஎழா:

இந்தவிதமான தீய செயல்கள் நாட்டில் பரவாத வண்ணம் நாட்டை நன்கு பரிபாலித்துக் கொண்டிருந்தது தேவாலயங்களின் அருள் என்றது பெரியபுராணத்தை பதிப்பிக்கும் போது நன்கு தெளிவாகியது: பெரியபுராணம் கந்தபுராணம் இரண்டையும் பதிப்பித்த பயன் தான் நான் இதை இங்கு சொல்கின்றேன் ஒழிய நான் ஓர் தலைவனாகவோ அல்லது கட்சிக்காரனாகவோ அல்லது தெரிந்தவனாகவோ இருக்கின்றேன் என சொல்லவில்லை.

உண்மை என்றும் அழியாது எனஉண்மையை உணர்ந்தார் ஏற்பர், அருளை மாயை மறைப்பது போல் உண்மையை பொய்மை இருள் மறைப்பது வழக்கம். எப்படியாயினும் உண்மை என்றோ வெளிப்படவே செய்யும். நாம் செய்யும் பணியை பலர் இன்று இகழ்ந்தாலும் கேலி செய்தாலும் இவர் திருத்தி விடுவாரோ எனக் கேட்டாலும் நாம் பட்டினியால் வாடி இறக்க வேண்டி நேரினும் என் நெஞ்சிற்கு ஓர் உண்மை புலனாயது: நான் ஓர் உண்மையான பணியைச் செய்தேன் பிறிதோர் நோக்கமும் இலாது செய்தேன்: தற்பெருமைக்காகவோ பாராட்டுப் பெறவோ அல்லது சிறப்புப் பெறவோ செய்யவில்லை: தமிழினம் உயர்ந்து சிறப்புற்றிருந்த காலத்தில் தமிழினத்து இருந்த நற்பண்புகளையும் உண்மையின் சிறப்பையும் தருமத்தின் உயர்வையும் அன்பின் அடிப்படையையும் இன்று அடிமைத்தளையாய் இருக்கும் நிலையில் அதனிடமுள்ள சிறுமைச் செயல்களையும் இரண்டினையும் சுட்டிக்காண்பித்து தமிழினம் உய்யவே வழி சொன்னேன், எம் நாடு உய்ய நான் வழி சொன்னேனே ஒழிய என்று ஒருநாள் மேடை மீது வந்து உங்களுக்காக நான் பாடுபட்டேன் எனக்கு வாக்குத் தாருங்கள் அல்லது எம்மை ஆதரியுங்கள் என்று கேட்கப் போறவன் அன்று. நமக்கு ஓர் விழா எடுப்பார்கள் என்று கருதியும் அன்று:

சால்பு என்னும் செயல் ஒன்று உண்டு: அது கீழ்மையான செயல்கள் நெறியில்லா செயல்கள் நாட்டில் பரவுகின்றபோது அதை சுட்டிக் காணபித்து அதை தவிர்க்கும்படி வேண்டுதல்: இது பெரிய சிவ தொண்டு என பெரியபுராணம் கூறியது: பாருங்கள் சிவனுக்கு பாலால் தயிரால் அபிஷேகம் செய்வதிலும் தருமமும் நீதியும் சால்பும் உடையவராய் வாழ்வது தலைசிறந்த சிவதொண்டு என பெரியபுராணத்தில் சேக்கிழார் மொழிகின்றார்:

விண்ணின் மழையாம் பொழி மழையும் வேதப்பயனாகும் சைவமும் எனக் கூறிய சேக்கிழார் சிவதொண்டு செய்வாரிடம் அதற்குரிய சில ஒழுக்க நெறி இல்லையேல் செய்வன பயன் தராது எனக் கூறியுள்ளார்: வேதம் உண்மையானது எனக் கொண்டால் அது தருமத்தின் வழி எனக் கொண்டால், அது அன்புருவாய சிவனைப் போற்றுகின்றது என்றால் அது அன்பிலாச் செய்கையை ஆதரிக்குமா? இதனாலேதான் அந்தணர்கள் இடத்து இந்த மிலேச்ச நெறி தலைப்பட்டு விளங்குமேல் அது அவர்களுடைய வேதத்தின் வழியை கெடுத்து அறிவை அகற்றி விடும என்றதால் மிலேச்ச நெறி வேண்டாம் என்றேன். கந்தபுராணத்து கச்சியப்பர் மிலேச்ச நெறிகள் வியப்பில. அவைகளால் உங்களுக்கு ஏதும் நற் பயன் தராது என்றே சொல்லி விட்டார் ஏன் சொன்னார் எனச் சிந்திக்க இங்கு ஒருவருமிலலை எனலாம். சந்திரனில் விண்வெளி வீரர் கால் வைத்தனர். சந்திரனில் ஒரு ஒலிபெருக்கி கோனைப்பூட்டி இங்கிருந்து பல்லில்லாச் சாத்திரி மந்திரம் ஓதினாலும் அதில் பலனில்லை என்பது அவர்க்கு தெரிந்து தான் இதைச் சொன்னார். அல்லது சிவானந்த குருகுலத்து மாணவரும் இவரும் இவர் போன்ற இன்னும் எத்தனையோ பேதைகளான வியாகரண நியாகரணங்களும் கூடி மந்திரம் கோஷமிட்டு சந்திரனில் கேட்கப்பண்ணினாலும் அதில் வியப்பொன்றுமில்லை என்பது கச்சியப்பரின் கருத்து.

கச்சியப்பர் ஓா அந்தணா: அதுவும சாதாரன வகை அன்று. அந்தணரில்சிவாச்சாரியார். குமரகோட்டப் பெருமானுக்கு அர்ச்சனை புரிந்தவர். அவர் பெற்ற அருளால் தான் இந்த கந்தபுராணம் நமக்கு ஓர் பெருங் கொடையாக வந்தது. கந்தபுராணம் தருமத்தின் அடிப்படை தவத்தின் சிறப்பு அருளின் பெருக்கம் எல்லையற்ற அநுபூதியின் நிலை. பெரியோர்கள் உச்சி மேல் வைத்து போற்றுவார்கள். கந்தபுராணத்தைப் போன்ற ஞானநூல் தமிழ் நாட்டில் இல்லை, அப்படியான புராணத்தை [illegible] இந்த அநீதிகட்கு உற்ற மிலேச்ச நாகரீகங்களில் வியப்பில்லை என சொல்லி விட இன்று பிராமணர் என் செய்கின்றார்: அதை தயவு செய்து சிந்தியுங்கள்:

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவருக்கு துயரம் வந்த போது அத் துயரம் ஏன் வந்தது என்று ஆராய்கின்றவன் தான் மனிதன். வந்த காரணத்தை உற்று யோசியாது மீண்டும் வெகுள்பவன் மூடனும் மூர்க்கனுமே ஆவான்: இதை வள்ளுவர் நோய்நாடி நோயின் முதல் நாடி வாய்ப்பச் செயல் என்ருர். இதனையும் சற்று சிந்தித்தால் ஓர் நோயின் மூலகாரணத்தை அறிந்து அந்த நோயின் மூலவேரை அறுத்து விட்டால் நோய் தன்பாட்டில் குணமாகும்.

இதனுலே நம் நாட்டில் இன்றுள்ள துயரத்திற்கு காரணம் அருள் இன்மையாகும். நாட்டில் மேடையில் பிரசங்கத்தில் சனம் திரள்வது பெரிதல்ல. மகாநாட்டுக்கு திரளான மக்கள் வருவது பெரிதல்ல. பாட்டுக் கச்சேரிக்கு போவது பெரிதல்ல, நம் மக்கள் யாரும் இனப் பகையின்றி அடிமைத்தனை இன்றி நம் முன்னேர் காட்டிய அறவழியில் அந்த நமது உயர்ந்த இலச்சியங்களைப் பேணி உலகிற்கு நாம் ஓர் ஆத்மிகத் தொடர்புடைய மக்கள் என காட்டுதலேசிறந்ததாகும். நாம் அதை விடுத்து கொலைகாரராக விண்ணுனம் பேசுபவராக வேடிக்கை பேசுபவராக வீண் பொழுது போக்குபவராக வாழ்வது பெரிதல்ல: தமிழினத்தின் பெருமை என்ருல் ஆத்மீகம் தான் உலோகாயுதம் அல்ல: இந்த ஆத்மீகச் சிறப்பை எமக்கு அருளவல்லனவே ஆலயங்கள்: அதற்கு வழி காட்டுவன வேதங்கள் ஆகவே வேத நெறிக்குரியவராக வேத நெறிப்படி முழுவதும் ஒழுகி ஆலயங்களில் நீருள் சிறப்பை பெருக்குதற்கு நாலு அந்தணராதல் மிலேச்சநெறி நீங்கியவராக முற்றிலும் வேதநெறி கடைப்பிடிப்பவராக இருத்தல் மிகமிக அவசியம், இவர்களால்ஆலயங்களில் அருள்நெறி பெருகினுல் தருமமும் தவமும் இறக்கும்: அவை நாட்டு மக்களுக்கு துன்பமில்லா வாழ்வைத் தரும் ஓர் காப்பாகும்: தமிழினம் உயரும்: நாடு தன்பாட்டில் சுதந்திரம் அடையும் எதும் ஓர் துன்பமில்லாமல் இரத்தக்களரி இல்லாமல் சுதந்திரம் பெறுதற்கு இதுவே வழியாகும்

ஓம் சாந்தி:

# சைவ பரிபாலன சபை நிர்வாகம் தலைகீழாம்.

வண்ணை சைவ பரிபாலன சபை நிர்வாகத்தில் பெரும் ஊழல்கள் தோன்றி உள்ளதாம், தற்போதுள்ள நிர்வாகம் அங்கு நிலவும் சீர்கேடுகளை அங்கத்தவர் சுட்டிக் காட்டியும் அவை பற்றிஅக்கறை கொள்ள வில்லையாம், சமயப்பணி என்றது கட்சிப்பணியாக மாறி வந்தவுடன் எதிர்க் கட்சி பிழை காட்டினுல் நிர்வாகத்திருப்போர் அதை வெறுத்து மறுத்துரைத்து ஊழல்கள் பெருக பார்த்திருக்கின்றனராம்,

சபையின் சொத்து சைவ மக்களின் சொத்தாக கருதி அங்கத்தவர் சிலர், சைவ மக்களின் நம்பிக்கைச் சொத்து விரயமாகிப் போவதை தடை செய்திட கோட்டில் வழக்கு தாக்கல் செய்துள்ளனராம், இந்த வழக்கின் முன் அரசாங்க விசாரணை ஒன்று நடை பெற்றது, அதில் ஓர் சட்டத் தரணி [இஸ்லாமியர்] சபையின் சார்பில் சட்டத்தணிரயாக இருந்தனராம்,

இச் சபையின் முன்னைய பொதுக் கூட்டம் ஒன்று மது அருந்திய நிலையில் நடை பெற்றது. இந்த சபை அச்சுக்கூடத்தில் அருகில் உள்ள அச்சுக்கூடம் தனது புத்தகம் ஒன்றை சபை அச்சுக் கூடத்தில் அச்சிட்டு தனது பேரில் வெளியிட்டு பணம் பெற்றதாம், இதற்கு சபை அங்கத்தவர் உடைந்தையாக இருந்தனராம்.

இந்த சபையின் பெயர் சைவ பரிபாலன சபை, வெளியிடும் பத்திரிகையின் பெயர் இந்து சாதனம், ஆகவே இந்த சாதனம் என்ன சாதனம் என்பதை விளங்குவது கடினமாக உள்ளது. பல சட்டத்தரணிகள் இச்சபையில் உளர் சைவம்

சைவம் என்ருல் இந்து என்ற கருத்தில் நாயன்மாரோ அல்லது சைவ நூலோ தெரிவிக்க வில்லை. இந்து என்றது இங்கிலீசுக்காறன் இந்திய சமயங்களை சொல்வதாகும் போலும் இந்து வெளி நாகரீகம் என்பதும் தமிழ் சைவ நூல்களில் பேசப்படவில்லை.

# சைவக்கிரியையில் உத்தமம் உணர்த்திய என்னை துன்புறுத்தல் நீதியோ?

உ

சிவமயம்

திரு. வை. நல்லையா அவர்கள்.
ஆசிரியர் சந்திர தீபம்,

அன்புள்ள ஐயா,

சங்கமன்கண்டிமூர்த்திப் பிரதிஷ்டை முகூர்த்த கண்டனம்

ஷெ கண்டனத் துண்டுப்பிரசுரம் சம்பந்தமாக எமக்குக் கிடைத்த பல தாபால்கள் முழு விபரங்களையும் ''சந்திர தீபம்'' ஆசிரியருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும் எனக் கேட்டுத் தங்களின் விலாசத்தையும் எனக்குத் தந்துள்ளனர். எனது விருப்பமும் அதுவே ஆகையால் சகல விபரங்களையும் தங்களுக்கு எழுதி அனுப்புகிறேன்: தயவு செய்து சந்தர தீபத்தில் பிரசுரிக்கும்படி கேட்கிறேன்.

30-9-79 பி. ப. சங்கமன்கண்டி உள் ஆலய ''விநாயகமூர்த்திப் பிரதிஷ்டை'' அழைப்பிதழ் கிடைத்தது. 22-10-79 அன்று அக்கரைப் பற்றுச் சித்திவிநாயகர் ஆலயமணிக் கோபுரத்துக்குக் கல்நாட்டு விழாச் செய்ய இருந்ததைக் குருட்டு நாளாக இருப்பதால் செய்ய வேண்டாம் என்று தடுத்திருந்தேன். பத்திரிகை தந்த சு. ப. சித்திவிநாயகர் ஆலய நிர்வாக சபைத் தலைவர் என்னிடம் பலவாறு வாதிட்டுச் சென்ருர்: மூன்று நாட்களாக இதனை ஆராய்ந்து கண்ட முடிவின் பலனுக 5-10-79ல் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக்குருக்களுக்கு ''சங்கமன்கண்டி விநாயகமூர்த்திப் பிரதிஷ்டைக்கு வைக்கப்பட்ட முகூர்த்தம் பிழையானதெனவும் குறித்த நாளில் செய்வது நன்றல்ல எனவும் அவர் மீது கொண்ட மதிப்பு காரணமாகவும் எமது சமயத்திற் கொண்ட பற்றுதல் காரணமாகவும் இந்த வேண்டுகோளைத் தங்கள்பால் விடுக்கிறேன் தயவுசெய்து தங்கள் பதிலை எதிர்பார்க்கிறேன்'' என எழுதி 2-45 மணிக்கு 8-10-79 பதிவுத் தாபால் மூலம் அனுப்பினேன், ஷெ ஆலயத்தர்மகர்த்தாக்கள் சபைக்கும் இதைப் பதிவுத்தாபாலில் தெரிவித்தேன். பதில் கிடைக்காமையால் 17-10-79 காலை 2ம் தந்தியாக பதிலுக்குப் பணம் அவசரம் என்ற தந்தியில் ''சங்கமன்கண்டி மூர்த்திப் பிரதிஷ்டை நட்சத்திரம் குருடு; திதிகுருடு; இலக்கினம் செவிடு 12ல் சந்திரன் 4ம் வீடு சுத்தமில்லை. இந் நாளிற் செய்ய வேண்டாம். தயவுடன் கேட்கிறேன்'' என்ற வாசகங்களை அடக்கித் தந்தி கொடுத்தேன்.

19-10-79 பகல் அவர்களிடமிருந்து பதில் கிடைத்தது:

அக்கடிதம் 19-10-1979 திகதியிடப்பட்டிருந்தது
அதில் ''பேரன்பு பூண்ட பரோபகாரம் நிறைந்த சிந்தைக்குரிய
உயர்திரு சிவஞானச்செல்வம் அவர்கட்கு.
உபயகுசலோபரி.
உங்கள் கடிதம் தந்தி கிடைத்தது நன்றி:

முகூர்த்தம் வைத்தவர்களிடத்தில் உங்கள் சந்தேகங்களைக் கேட்டுத் தெளியவும் நல்லூர்கமலாம்பிகை சமேத கைலாசநாதர் ஜோதிஷ நிலையத்தில் கேட்டு சந்தேகத்தைத் தெளிந்து கொள்ளவும்.

இங்ஙனம்ஷெ குருக்கள் அவர்களுக்காக செயலாளர்

இந்தப் பதில் எனக்கு மாத்திரமல்ல இங்குள்ள பலருக்குத் திருப்திதரவில்லை: இதன் காரணமாக 19-10-79 துண்டுப்பிரசுரம் அவசர அச்சுக்குக் கொடுக்கப்பட்டதெனினும் 21ந் திகதி குருக்கள் வந்ததும் நேரிற் பேசிய பின்பே விநியோகிப்பதெனவும் முடிவு செய்தேன்: ஆனுல் 20-10-79 இரவு சங்கமன்கண்டி உள் ஆலயத் தர்மகர்த்தா ஒருவரினுல் மிகமோசமான நிலையடைய இருந்த நான் நண்பர்கள் மூவரினுதவியினுல் காப்பாற்றப்பட்டேன். ஆயினும் நேரிற் செல்வதென்ற முடிபு மாறவில்லை. 21-10-79 காலை நான் அங்கு சென்ருல் சாமான்களைக் குழப்பி விட்டு சமய ஆராதனையைத் தடுத்துச் சமய குருவை அவமானப்படுத்தியதாய்ப் பொலிசிடம் ஒப்படைக்க இருப்பதாக ஒரு செய்தி எனக்குக் கிடைத்தது: இதன் காரணமாக மறுபிரசுரமும் உடன் அச்சிட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

விடயம் அறிந்த ஒருவரை இருவரின் துணையுடன் சங்கமன் கண்டிக்கனுப்பி கிரியை விடயங்களையும் அறிந்து கொண்டேன்.

அன்புள்ள ஐயா!

அவர்கள் செய்தது சரியாயின் பதிற் பிரசுரம் விடட்டும் அல்லது மான நஷ்ட வழக்குத் தொடரட்டும் அது தான் வரவேற்கக் கூடியது: அதை விடுத்து மொட்டைக் கடிதங்களில் பயமுறுத்தல்கள்: கொலை மிரட்டல் ஆகிய வற்றுடன் பண்பு கெட்ட வார்த்தைகளும் எழுதப்பட்டு வருகின்றன; இது வரை மூன்று பயமுறுத்தற் கடிதங்கள் கிடைத்துள்ளன அவர்கள் கடிதங்களிற் கண்டபடி நான் கொலை செய்யப் பட்டாலும் தயவு செய்து இவ்விபரங்கள் யாவையும் சந்திர தீபத்திற் பிரசுரித்து விடும்படி கேட்கிறேன்.

சிவஸ்ரீ.எல்.கே.சிவஞானச்செல்வம்
ஐயர்
அக்கரைப்பற்று:

இப்படிக்கு
உண்மையுள்ள
சிவஞானச்செல்வம்

# சைவத்திற்கு உயிர் கொடுக்கின்றது.

## நவாலி முதலியார் மகேசன் கருத்து

சந்திர தீபம் என்னும் பத்திரிகை சைவ சமயத்துக்குப் புத்துயிர் கொடுக்கும் ஒன்ருகும்

அது பல அரும் பெருங் கருத்துக்களை வெளியிடுகின்றது. வரவேற்கக் கூடியது. ஆயினும் ஒரு சிலரைக் குறித்துக் கண்டனங் கூறுவதைத் தவிர்ப்பது நலம், காலத்துக்கு ஏற்ற நல்ல திருத்தங்களை வரவேற்பதும் நன்றே, மற்றவர்களது மனதுகளைப் புன்படுத்தாது மென்மையாகவும், சாதுரியமாகவும் உண்மைகளை வெளியிடுவதில் பிழையில்லை. அன்பால் பொறையால் அகிம்சை வகையில் ஆக்க வேலைகளில் தொண்டு புரிந்து சைவத்தின் உண்மை விளக்கங்களை மென்மேலும் பெருக்கி வளர்க்க இப் பத்திரிகை தொண்டு புரிய இறைவன் அருள் பாலிக்க வேண்டுமென இறைஞ்சு கின்றேன்.

நவாலி
8 10 79

இங்ஙனம்
வை. மகேசன்.

# வாங்கில் இரத்தம் எப்படி வந்தது?

இப்படியாக சுண்ணாகத்தில் உள்ள ஓர் சைவப் பாடசாலையின் அதிபராய் இருந்தவர் என்னைக் கேட்டார்.

நான் அவரிடம் சில வருடங்கட்டு முன்பு நான் அச்சேற்றிய கந்தபுராண உரைப் பிரதிகள் கொடுக்கச் சென்றிருந்தேன். முன்பு அவர் என்னிடம் அச் சேற்றும் பிரதிகளை வாங்கி எனக்கு பண உதவி செய்பவர், ஆதலினுல் வழமை போல் அப்பிரதிகளை அம் முறை கொடுக்கச் சென்ற நேரம் அவர் என்னிடம் சொன்னுர். ''ஐயா முன்பு உங்களை இப்பணிக்கு ஊக்கிவிக்கும் பொருட்டே இப்பிரதிகளை வேண்டுவேன்! ஆனுல் இன்று இப்பிரதியை இங்கு வாங்க மனம் வரவில்லை. ஏன் என்ருல் என் மனம் வேதனைப் படுமாறு ஒரு நிலை இன்று காலை நான் கண்டேன், நேற்று விடுமுறை விசேடவகுப்பு ஒன்று இங்கு நடை பெற்றது. ஆனுல் அந்த வகுப்பறையில் வாங்கில் இரத்தம் இருந்தது. நான் கண்டதும் விறைத்துப் போனேன். ஏனெனில் இது பற்றி நான் சர்ச்சை எழுப்பினுல் நாளைக்கு நான் இங்கு வருதல் முடியாது. ஆபத்தாய் முடியும் எனக் கூறியபடி இந்த இரத்தம் வந்த காரணம் என்னென்று விளங்கவில்லை? நீங்கள் என்ன கருதுவீர்கள் என்ருர். நான் சொன்னேன் நான் இதற்கு என்ன பதில் சொல்லலாம். நாங்கள் இதை பற்றி பேசினுல் வீண் பிரச்சனை. ஏன் என்ருல் ஆலயம் வித்தியாலயம் இரண்டும் உயர்ந்த நெறிகளைக் கடைப்பிடித்தற்காகும். சிறுமைகள் அங்கு தலைப் பட்டால் நாம் ஒன்றும் செய்ய முடியாது எனக்கூறி மீண்டுகொண்டேன்.

---

இப் பத்திரிகை கொக்குவில் மேற்கிலிருக்கும் திரு. வை. நல்லையா அவர்களால் தமது சந்திரதீப அச்சகத்தில் பதித்து பிரசுரிக்கப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org